

SURA'S
திருத்தியமைக்கப்பட்ட புதிய 2023 பாடநூலின்படி
தயாரிக்கப்பட்ட சுரா-வின் 2023-24 பதிப்பு
ENGLISH மற்றும் தமிழ் மீடியம்
10ஆம் வகுப்பு 100% வெற்றி 2023-24 பதிப்பு சுராவின் தமிழ் உரைநூல்
10th STD. 100% SUCCESS 2023-24 EDITION SURA'S SMART ENGLISH Based on the New Updated Textbook
10th STD. 100% SUCCESS 2023-24 EDITION SURA'S MATHEMATICS Based on the Updated New Textbook
10th STD. 100% SUCCESS 2023-24 EDITION SURA'S SCIENCE Based on the updated New textbook
10th STD. 100% SUCCESS 2023-24 EDITION SURA'S SOCIAL SCIENCE Based on the updated new textbook
10ஆம் வகுப்பு 100% வெற்றி 2023-24 பதிப்பு சுராவின் கணக்கு
10ஆம் வகுப்பு 100% வெற்றி 2023-24 பதிப்பு சுராவின் அறிவியல்
10ஆம் வகுப்பு 100% வெற்றி 2023-24 பதிப்பு சுராவின் சமூக அறிவியல்
SURA'S SMART ENGLISH with Bilingual approach தமிழ் விளக்கங்களுடன் Low Priced Edition 10th STD.
10th Std
School Guides
100% SUCCESS
Available in
All Leading Bookshops
call @
8124201000
8124301000
Buy@surabooks.com
2023-24 EDITION
Available on
surabooks.com
Limited stock Only

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores

# சுராவின்

# தமிழ் உரைநூல்

## 10ஆம் வகுப்பு

**இலவசம்**
சுய மதிப்பீடு
பயிற்சி நூல்

### சிறப்பம்சங்கள்

- புதிய பாடநூலின்படி, பாடப்பகுதிகளில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடைகள் தெளிவாகவும் எளிமையாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.
- திறன் அறிவோம் பகுதி வினாக்கள் பிரிக்கப்பட்டு செய்யுள், உரைநடை, விரிவானம், இலக்கணம் என அந்தந்த பகுதிகளில் புத்தக வினா என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர பலவுள் தெரிக, குறுவினா, சிறுவினா, நெடுவினாக்கள் **கூடுதலாக விடைகளுடன் உள்ளே தரப்பட்டுள்ளன.**
- கற்பவை கற்றபின், மொழியோடு விளையாடு, மொழியை ஆள்வோம், மொழித்திறன் பயிற்சிகள் ஆகிய பகுதிகளில் உள்ள **அனைத்து பயிற்சிகளுக்கும் முழு விடைகள் தரப்பட்டுள்ளன.**
- அரசு மாதிரி வினா 2019 (அ.மா.வி.), காலாண்டுத் தேர்வு 2019, அரையாண்டுத் தேர்வு 2019, அரசு துணைத்தேர்வு வினாத்தாட்கள் செப்டம்பர் 2020, 2021, முதல் & இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2022, அரசு பொதுத் தேர்வு – மே 2022, உடனடித் தேர்வு – ஆகஸ்ட் 2022 மற்றும் PTA வினாத்தாட்கள் 1 முதல் 6 வரையிலான வினாக்கள், ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- உடனடித் தேர்வு – ஆகஸ்ட் 2022 வினாத்தாள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை





For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 78718 02000/ 98409 26027
orders@surabooks.com
PH: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores

# பதிப்பாசிரியர் உரை

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. – திருவள்ளுவர்

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** பத்தாம் வகுப்பிற்கான **தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம், கூடுதல் வினா விடைகள், மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**

**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,

(சுரா பதிப்பகம்)

## மாணவச் செல்வங்களே...

குறிப்பு:

- பாடப்பகுதியை முழுமையாகப் படிக்கவும்.
- தலைப்பு, ஆசிரியர் குறிப்பு, நுழையும்முன், சொல்லும் பொருளும், பாடலின் பொருள், இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், பெட்டிச் செய்தி, நூல்வெளி என அனைத்தையும் ஒரு மதிப்பெண் நோக்கில் படிக்கவும்.
- இலக்கணப் பகுதிகளை எழுதிப் பார்த்தல் நலம்.
- தேர்வில் ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு கேள்விகள் கேட்கப்பட்டால் கூடுதல் செய்திகள் தவிர்த்து எழுதினால் போதுமானது.
- செய்யுள், உரைநடை, துணைப்பாடம் ஆகிய பகுதிகளில் நெடுவினாக்களுக்கு குறிப்புச் சட்டகம் இட்டு எழுதுதல் முழு மதிப்பெண் பெற வழி வகுக்கும்.
- கதை போல உள்வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores

# பொருளடக்கம்


**மனப்பாடச் செய்யுள் பகுதி** ...................... 1-4

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 1. | மொழி<br>அமுதஊற்று | * அன்னை மொழியே! (செய்யுள்)<br>தமிழ்ச்சொல் வளம் (உரைநடை)<br>இரட்டுற மொழிதல் (செய்யுள்)<br>உரைநடையின் அணிநலன்கள் (துணைப்பாடம்)<br>எழுத்து, சொல் (இலக்கணம்) | 5-50 | ஜூன் |
| 2. | இயற்கை, சுற்றுச்சூழல்<br>உயிரின் ஓசை | கேட்கிறதா என் குரல்! (உரைநடை)<br>காற்றே வா! (செய்யுள்)<br>* முல்லைப்பாட்டு (செய்யுள்)<br>புயலிலே ஒரு தோணி (துணைப்பாடம்)<br>தொகைநிலைத் தொடர்கள் (இலக்கணம்) | 51-96 | ஜூன் |
| 3. | பண்பாடு<br>கூட்டாஞ்சோறு | விருந்து போற்றுதும்! (உரைநடை)<br>* காசிக்காண்டம் (செய்யுள்)<br>மலைபடுகடாம் (செய்யுள்)<br>கோபல்லபுரத்து மக்கள் (துணைப்பாடம்)<br>தொகாநிலைத் தொடர்கள் (இலக்கணம்)<br>திருக்குறள் (வாழ்வியல்) | 97-152 | ஜூலை<br>முதல் இடைத்தேர்வு இயல் - 1, 2, 3 |
| 4. | அறிவியல், தொழில்நுட்பம்<br>நான்காம் தமிழ் | செயற்கை நுண்ணறிவு (உரைநடை)<br>* பெருமாள் திருமொழி (செய்யுள்)<br>பரிபாடல் (செய்யுள்)<br>விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை (துணைப்பாடம்)<br>இலக்கணம் - பொது (இலக்கணம்) | 153-192 | ஜூலை |
| 5. | கல்வி<br>மணற்கேணி | மொழிபெயர்ப்புக் கல்வி (உரைநடை)<br>* நீதிவெண்பா (செய்யுள்)<br>* திருவிளையாடற் புராணம் (செய்யுள்)<br>புதிய நம்பிக்கை (துணைப்பாடம்)<br>வினா விடை வகைகள், பொருள்கோள் (இலக்கணம்) | 193-240 | ஆகஸ்ட் |


www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 6. | கலை, அழகியல், புதுமைகள் | நிகழ்கலை (உரைநடை) | 241-302 | ஆகஸ்ட் |
| | | பூத்தொடுத்தல் (செய்யுள்) | | |
| | | * முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் (செய்யுள்) | | |
| | | * கம்பராமாயணம் (செய்யுள்) | | |
| | நிலா முற்றம் | பாய்ச்சல் (துணைப்பாடம்) | | |
| | | அகப்பொருள் இலக்கணம் (இலக்கணம்) | காலாண்டுத்தேர்வு இயல் - 1 முதல் 6 வரை | |
| | | திருக்குறள் | | |
| 7. | நாகரிகம், நாடு, சமூகம் | சிற்றகல் ஒளி(தன் வரலாறு) (உரைநடை) | 303-354 | அக்டோபர் |
| | | ஏர் புதிதா? (செய்யுள்) | | |
| | | மெய்க்கீர்த்தி (செய்யுள்) | | |
| | விதைநெல் | * சிலப்பதிகாரம் (செய்யுள்) | | |
| | | மங்கையராய்ப் பிறப்பதற்கே...(துணைப்பாடம்) | | |
| | | புறப்பொருள் இலக்கணம் (இலக்கணம்) | | |
| 8. | அறம், தத்துவம், சிந்தனை | சங்க இலக்கியத்தில் அறம் (உரைநடை) | 355-394 | அக்டோபர் |
| | | ஞானம் (செய்யுள்) | | |
| | | * காலக்கணிதம் (செய்யுள்) | | |
| | பெருவழி | இராமானுசர் (நாடகம்) (துணைப்பாடம்) | இரண்டாம் இடைத்தேர்வு இயல் - 7, 8 | |
| | | பா-வகை, அலகிடுதல் (இலக்கணம்) | | |
| 9. | மனிதம், ஆளுமை | ஜெயகாந்தம் (நினைவு இதழ்) (உரைநடை) | 395-432 | நவம்பர் டிசம்பர் |
| | | சித்தாளு (செய்யுள்) | | |
| | | * தேம்பாவணி (செய்யுள்) | | |
| | அன்பின் மொழி | ஒருவன் இருக்கிறான் (துணைப்பாடம்) | அரையாண்டுத்தேர்வு இயல் - 1 முதல் 9 வரை | |
| | | அணி (இலக்கணம்) | | |
| **மொழித்திறன் பயிற்சிகள்** வாக்கியப் பிழைகளைத் திருத்துதல், மரபுப் பிழையை நீக்கி எழுதுதல், தொடரை மாற்றி அமைத்தல், உவமை தொடரை சொற்றொடராக அமைத்தல் உவமை, உருவகமாக மாற்றுதல், இலக்கிய நயம் பாராட்டல், கடிதம் எழுதுதல், பொதுக் கட்டுரைகள். | | | 433-450 | |
| உடனடித் தேர்வு ஆகஸ்ட் – 2022 வினாத்தாள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன. | | | 451-458 | |
| ஜனவரி - முதல் திருப்புதல் தேர்வு இயல் 1 - 6 / பிப்ரவரி - இரண்டாம் திருப்புதல் தேர்வு இயல் 7 -9 மார்ச் - இறுதி திருப்புதல் தேர்வு இயல் 1-9 | | | | |

*குறியிடப்பட்டவை மனப்பாடப் பகுதி



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores

# மனப்பாடச் செய்யுள்

## அன்னை மொழியே

### அழகார்ந்த செந்தமிழே!

கனிச்சாறு (தொகுதி-1)

**இயல் – 1**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

பிடிஏ–4, 6; அரையாண்டுத் தேர்வு 2019
பிடிஏ–2, செப்.–2021,
முதல் தி.தேர்வு, மே–2022

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

பிடிஏ–1
முதல் தி.தேர்வு 2022

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## முல்லைப்பாட்டு

### நல்லோர் விரிச்சி கேட்டல்

**இயல் – 2**

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம். – அடி 12–17

பிடிஏ–3; காலாண்டுத் தேர்வு 2019

– நப்பூதனார்

## காசிக்காண்டம்

**இயல் – 3**

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

இல்லொழுக்கம், (பா எண் : 17)

பிடிஏ–2, 5

– அதிவீரராம பாண்டியர்



orders@surabooks.com
PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



# திருக்குறள்

| | | |
|---|---|---|
| **மெய் உணர்தல்(36)** | 4. | எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்<br>மெய்ப்பொருள் காண்ப தறிவு. முதல் தி.தேர்வு 2022 |
| **பெரியாரைத் துணைக்கோடல்(45)** | 8. | பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே<br>நல்லார் தொடர்கை விடல்.<br>பிடிஏ–4,5; செப்.–2021, ஆகஸ்ட்–2022 |
| **கண்ணோட்டம்(58)** | 11. | பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்<br>கண்ணோட்டம் இல்லாத கண். அ.மா.வி 2019; பிடிஏ–2 |
| **ஆள்வினை உடைமை(62)** | 14. | அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்<br>பெருமை முயற்சி தரும். |
| | 16. | முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை<br>இன்மை புகுத்தி விடும்.<br>காலாண்டுத் தேர்வு 2019, மே–2022<br>– திருவள்ளுவர் |

# பெருமாள் திருமொழி

**இயல் – 4**

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

அ.மா.வி 2019; காலாண்டுத் தேர்வு 2019
இரண்டாம் தி.தேர்வு & ஆகஸ்ட்–2022
பாசுர எண் : 691 – குலசேகராழ்வார்

# நீதிவெண்பா

**இயல் – 5**

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

– கா.ப. செய்குதம்பிப் பாவலர்

# திருவிளையாடற்புராணம்

## மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்

பிடிஏ–5; செப்.–2020

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

பா எண் : 2644
– பரஞ்சோதி முனிவர்



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



# முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

## ஆடுக செங்கீரை !

இயல் – 6

பிடிஏ–4

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழிய முச்சிய முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை.

செங்கீரைப் பருவம்,
பா.எண். 8
– குமரகுருபரர்

# கம்பராமாயணம்

## பாலகாண்டம் – நாட்டுப்படலம்

இயல் – 6

செப்.–2021

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்,
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.

பா.எண். 35

### அயோத்தியா காண்டம் – கங்கைப்படலம்

இரண்டாம் தி.தேர்வு 2022

வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்.

பா.எண். 1926
– கம்பர்

# திருக்குறள்

| | |
|---|---|
| அமைச்சு (64) | 4. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்<br>தியற்கை அறிந்து செயல். அ.மா.வி 2019; பிடிஏ–1 |
| பொருள்செயல் வகை (76) | 5. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்<br>பொருளல்ல தில்லை பொருள்.<br>8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்<br>றுண்டாகச் செய்வான் வினை. |



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



| | |
|---|---|
| **குடிசெயல் வகை (103)** | 14. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும் உலகு. பிடிஏ–6 இரண்டாம் தி.தேர்வு 2022 |
| **நல்குரவு (105)** | 15. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின் இன்மையே இன்னா தது. |

## சிலப்பதிகாரம்

### மருவூர்ப் பாக்கம்

**இயல் – 7**

அரையாண்டுத் தேர்வு 2019; பிடிஏ–1,6
ஆகஸ்ட்–2022

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

இந்திரவிழா ஊரெடுத்த காதை
(அடி 18–23) – இளங்கோவடிகள்

## காலக்கணிதம்

**இயல் – 8**

பிடிஏ–3

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

– கண்ணதாசன்

## தேம்பாவணி

### இயற்கை கொண்ட பரிவு

**இயல் – 9**

அ.மா.வி 2019; பிடிஏ–2; செப்.–2020, மே–2022

நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே.

பா எண் : 2410 – வீரமாமுனிவர்

★ ★ ★



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores

**இயல் 1**

# அன்னை மொழியே

**கவிதைப் பேழை**

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## கரு



* மழலையின் அழகு மிகுந்த சிரிப்பையும், சான்றோர்களின் சிறந்த பட்டறிவையும் கொண்டவள்.
* இவ்வுலகில் உள்ள எல்லாப் பொருள்களையும், தன்னுள் கவிதைகளாக உள்ளடக்கியவள்.
* இறுகிய இதயத்தையும் இனிக்கும் படி செய்பவள். அறிவையும் அன்பையும் வளப்படுத்துபவள். இத்தகைய தமிழ் அன்னையின் பெருமையைப் பாவலரேறு பெருமை பொங்கப் பாடுகிறார்.

## ஆசிரியர் குறிப்பு



**ஆசிரியர்** : பாவலரேறு பெருஞ்சித்திரனார்
பா + வல் + ஏறு = பாவலரேறு
பா – பாடல், வல் – வலிமை மிக்க ஏறு – ஆண் சிங்கம்
(பாடல் எழுதுவதில் ஆண் சிங்கத்தைப் போன்றவர்.)

**இயற்பெயர்** : துரை. மாணிக்கம் ( இதில் – தந்தையின் பெயராகிய துரைசாமி என்பதன் சுருக்கமே துரை)

**பெற்றோர்** : துரைசாமி – குஞ்சம்மாள்

**காலம்** : 10.03.1933 – 11.06.1995 (62)

**பிறந்த ஊர்** : சேலம் மாவட்டம் – சமுத்திரம் என்னும் சிற்றூர்.

**இயற்றிய நூல்கள்** : கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப் பறவைகள், நூறாசிரியம், உலகியல் நூறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி. திருக்குறள் மெய்ப்பொருளுரை (உரைநூல் இது தமிழுக்குக் கருவூலமாக அமைந்தது) போன்ற 40க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

**நடத்திய இதழ்கள்** : தென்மொழி, (1956) (தமிழ்ச்சிட்டு).

**சிறப்புகள்** : எழுத்தாளர், புலவர், தனித்தமிழ் ஆர்வலர். தனித்தமிழ்க் கொள்கையும் தனித்தமிழ்நாடு கொள்கையும் கொண்டவர். தமிழ்த் தேசியத் தந்தை என அழைக்கப்படுபவர் பாரதிதாசனின் தலைமாணாக்கர். இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

## நூற் குறிப்பு

* பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி–1) தொகுப்பிலிருந்து **தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்** போன்ற இருவேறு தலைப்புகளில் உள்ள பாடல்கள் பாடப்பகுதியாக உள்ளது.
* கனிச்சாறு 8 பாடல் தொகுதிகளை உடைய ஒரு கவிதை நூலாகும்.

## பாடல்

### அழகார்ந்த செந்தமிழே!

**அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!**
**கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்**
**மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!**

## சொல்லும் பொருளும்

* அன்னை மொழியே – தாய்மொழியே
* அழகார்ந்த செந்தமிழே – அழகாய் அமைந்த செழுமையான தமிழே
* முன்னைக்கும் முன்னை – பழமைக்கும் பழமையாய்
* முகிழ்த்த நறுங்கனியே – தோன்றிய இனிமையான கனியே
* கடல் கொண்ட – கடலால் கொள்ளப்பட்ட
* கன்னிக் குமரி நாட்டிடையில் – குமரிக்கண்டத்தில்
* மன்னி அரசிருந்த – நிலைத்து அரசாண்ட
* மண்ணுலகப் பேரரசே – இந்தப் பூவுலகின் பேரரசே



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



| | |
|---|---|
| 23. முந்துற்றோம் – முற்பட்டோம் | 24. யாண்டும் – எங்கும் |
| 25. உந்தி – உள்ளிருந்து மேல்நோக்கி நகர்ந்த | 26. எண் தொகையே – எட்டு நூல்கள் தொகுக்கப்பட்ட எட்டுத்தொகை |
| 27. தென்னன் – தென்னாடு எனப்பட்ட பாண்டிய நாட்டை ஆண்ட பாண்டியன் | |
| 28. இன்னறும் – இனிமையும் அறவழியும் கொண்ட (அறு என்ற வினைச் சொல்லின் அடி) | |
| 29. நற்கணக்கு! – நல்ல கணக்கு இங்கு நற்கணக்கு என்பது பதினெண் கீழ்க்கணக்காகும். | |
| 30. ஆர்ந்த – 'நிறைந்த' என்ற பொருளில் ஒரு பெயர்ச்சொல் (பெயரடை) | |
| 31. தனித்தமிழ் – பிற மொழி சொற்களின் கலப்படமின்றி மரபு சார்ந்த இலக்கண முறைகளுக்கு உட்பட்டு எழுதப்படும், பேசப்படும் தமிழே தனித்தமிழ் ஆகும். | |

## பிரித்தெழுதுக

| | |
|---|---|
| 1. செந்தமிழ் – செம்மை + தமிழ் | 6. செப்பரிய – செப்பு + அரிய |
| 2. நறுங்கனி – நறுமை + கனி | 7. உணர்வெழுப்ப – உணர்வு + எழுப்ப |
| 3. நாட்டிடையில் – நாடு + இடையில் | 8. பேரரசு – பெருமை + அரசு |
| 4. மண்ணுலகம் – மண் + உலகம் | 9. எந்தமிழ் நா – எம் + தமிழ் + நா |
| 5. நற்கணக்கு – நன்மை + கணக்கு | 10. செந்தாமரை – செம்மை + தாமரை |

## இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| 1. செந்தமிழ், நறுங்கனி, செந்தாமரை, பேரரசு | பண்புத்தொகைகள் |
| 2. முகிழ்த்த, சிறகார்ந்த | பெயரெச்சங்கள் |
| 3. கன்னிக்குமரி, மண்ணுலகம் | உருவகங்கள் |
| 4. தென்னன் மகள் | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| 5. நின்பெருமை | ஆறாம் வேற்றுமைத் தொகை |
| 6. குடித்து | வினையெச்சம் |
| 7. வாழ்த்துவமே, முந்துற்றோம் | தன்மைப் பன்மை வினைமுற்றுகள் |
| 8. யாண்டும் | முற்றும்மை |

## திறன் அறிவோம் - புத்தக வினா

### பலவுள் தெரிக.

கேள்வி எண்: 3 | புத்தக பக்கம் எண்: 19

கா.தேர்வு 2019; முதல் தி.தேர்வு 2022

3. **எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.**
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

   விடை **இ) எம் + தமிழ் + நா**

## கூடுதல் வினாக்கள்

1. **பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் .................**
   அ) துரை.மாணிக்கம் ஆ) தி. இராசகோபாலன் இ) துரைராசு ஈ) எத்திராசலு
2. **'தென்னன் மகளே!' இத்தொடரில் தென்னன் என்பவர்...............**
   அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்
3. **நிலைத்த நூலென பாவலரேறு எதை குறிப்பிடுகிறார்?**
   அ) எட்டுத்தொகை ஆ) சிலப்பதிகாரம் இ) பத்துப்பாட்டு ஈ) மணிமேகலை
4. **பெருஞ்சித்திரனாரின் எந்தப் படைப்பு தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது?**
   அ) உலகியல் நூறு ஆ) திருக்குறள் மெய்ப்பொருளுரை
   இ) கனிச்சாறு ஈ) எண்சுவை எண்பது
5. **'கனிச்சாறு' என்ற கவிதை நூலைப் படைத்தவர்...................**
   அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) தாராபாரதி
   இ) வாணிதாசன் ஈ) முடியரசன்
6. **செந்தமிழ் – என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.**
   அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ் இ) செம்மை + தமிழ் ஈ) செ + தமிழ்



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



24. ‘பாப்பத்தே’ என்பது ................ நூல்களைக் கொண்டது.
அ) 8 ஆ) 5 இ) 18 ஈ) 10

25. பொருந்துவதைத் தேர்க.
அ) கனிச்சாறு ஆ) தமிழ்ச்சிட்டு இ) பாவியக் கொத்து ஈ) எண்சுவை எண்பது
1) அ, ஆ, இ 2) அ, இ, ஈ 3) அ, ஈ 4) ஆ மட்டும்

26. தமிழ் முத்தமிழாய் வளர்ந்தது இதில் முத்தமிழ் என்பவை ..................
அ) விண்ணோடும், முகிலோடும் ஆ) கதிரவனோடும், கடலோடும்
இ) இயல், இசை, நாடகம் ஈ) இவை அனைத்தும்

27. அறிவைப் பெருக்குபவள்; அன்பை வயப்படுத்துபவள் எனக் கவிஞர் எதை உருவகப்படுத்துகிறார்?
அ) உலகம் ஆ) நாடு இ) கடல் ஈ) மொழி

28. பேரரசு என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
அ) பேர் + அரசு ஆ) பெருமை + அரசு இ) பெரு + அரசு ஈ) பேர + அரசு

29. பாண்டிய மன்னனின் மகளாகப் பாவலரேறு எதைக் குறிப்பிடுகிறார்?
அ) தமிழை ஆ) நாட்டை இ) மொழியை ஈ) இலக்கியத்தை

**விடைகள்:**

| | | |
|---|---|---|
| 1. அ) துரை.மாணிக்கம் | 2. இ) பாண்டியன் | 3. ஆ) சிலப்பதிகாரம் |
| 4. ஆ) திருக்குறள் மெய்ப்பொருளுரை | 5. அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் | 6. இ) செம்மை + தமிழ் |
| 7. ஈ) வண்டு | 8. ஈ) செம்மை + தாமரை | 9. அ) திருக்குறள் |
| 10. இ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு | 11. அ) தமிழ் மொழி | 12. ஆ) தமிழ் அன்னை |
| 13. இ) பண்புத் தொகை | 14. ஈ) கனிச்சாறு | 15. அ) கவிதை |
| 16. இ) இதழ்கள் | 17. இ) முல்லைப் பாட்டு | 18. ஈ) பரிபாடல் |
| 19. ஆ) 4, 1, 2, 3 | 20. ஆ) கனிச்சாறு | 21. ஈ) 8 |
| 22. ஆ) 3, 1, 2, 4 | 23. ஆ) சீர்மோனை,அடிஎதுகை | 24. ஈ) 10 |
| 25. 2) அ, இ, ஈ | 26. இ) இயல், இசை, நாடகம் | 27. ஈ) மொழி |
| 28. ஆ) பெருமை + அரசு | 29. அ) தமிழை | |

## திறன் அறிவோம் - புத்தக வினா

**குறுவினா** கேள்வி எண்: 2 புத்தக பக்கம் எண்: 19

அ.மா.வி 2019, மே–2022

2. **‘மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!’ -இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

(i) சீவகசிந்தாமணி (ii) வளையாபதி (iii) குண்டலகேசி

## கூடுதல் வினாக்கள்

1. **பெருஞ்சித்திரனார் எமக்குயிர் என எதனைக் கூறுகிறார்?**

பெருஞ்சித்திரனார் ‘தமிழே’ எமதுயிர் எனக் கூறுகிறார்.

2. **வண்டைப் போல் நாம் என்ன செய்வதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்?**

செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடும் வண்டைப் போல நாம் தமிழைச் சுவைத்து தமிழின் பெருமையை முழங்குவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

3. **அன்னை மொழிப் பாடலை அழகாக்கும் நூல்கள் யாவை?**

**அன்னை மொழிப் பாடலை அழகாக்கும் நூல்கள்:**
திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை.

4. **‘முந்துற்றோம் யாண்டும்’ – எனப் பெருஞ்சித்திரனார் கூறுவது யாது?**

**உள்ளிருந்து பற்றுணர்வு பொங்கி எழ:**
உள்ளத்திலே இன்பத் தீ தோன்றுகிறது. செந்தாமரை மலரில் உள்ள தேனை அருந்திவிட்டுச் சிறகு அசைத்து பாடும் வண்டைப் போல, நாங்களும் உன்னைச் சுவைத்து உனது சிறப்புகளை எல்லா இடங்களிலும் பாடுகிறோம் என்கிறார்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



## திறன் அறிவோம் - புத்தக வினா

**சிறுவினா** கேள்வி எண்: 1 புத்தக பக்கம் எண்: 20

பிடிஏ–2, மே–2022

**1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?**

**தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்கள் :**

(i) தமிழ்மொழி பழமைக்குப் பழமையாய் உள்ளது.
(ii) கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து ஆட்சி செய்தது.
(iii) பாண்டிய மன்னனின் மகளாக வளர்ந்தது.
(iv) திருக்குறளின் பெருமைக்கு உரியதாய் விளங்குகிறது.
(v) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாக அமைந்துள்ளது.
(vi) நிலைத்து நிற்கும் சிலப்பதிகாரமாகவும், அழகான மணிமேகலையாகவும் விளங்குகிறது.

## கூடுதல் வினா

**1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் யாவை?**

| பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் – 18 | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நாலடியார் | 7 | ஐந்திணை ஐம்பது | 13 | ஆசாரக் கோவை |
| 2 | நான்மணிக் கடிகை | 8 | ஐந்திணை எழுபது | 14 | பழமொழி நானூறு |
| 3 | இன்னா நாற்பது | 9 | திணைமொழி ஐம்பது | 15 | சிறுபஞ்ச மூலம் |
| 4 | இனியவை நாற்பது | 10 | திணைமாலை நூற்றைம்பது | 16 | முதுமொழிக் காஞ்சி |
| 5 | கார் நாற்பது | 11 | திருக்குறள் | 17 | ஏலாதி |
| 6 | களவழி நாற்பது | 12 | திரிகடுகம் | 18 | கைந்நிலை |

## திறன் அறிவோம் - புத்தக வினா

**நெடுவினா** கேள்வி எண்: 1 புத்தக பக்கம் எண்: 20

**1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.** பிடிஏ–5 அ.மா.வி, காலாண்டுத் தேர்வு 2019, ஆகஸ்ட்–2022

| குறிப்புச்சட்டகம் |
|---|
| 1. முன்னுரை |
| 2. பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்து |
| 3. பாவலரேறு தமிழ் வாழ்த்து |
| 4. முடிவுரை |

**முன்னுரை:**

**தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் – இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்கு சுடர்தந்த தேன்!**

என்ற பாவேந்தரின் தமிழ்ப்பற்றைப் போற்றி வணங்குகிறேன். அனைவருக்கும் வணக்கம்.

தமிழ்த்தாய் இன்று, நேற்றுப் பிறந்தவள் இல்லை, என்று தோன்றியவள் என்று கூறமுடியாத அளவிற்கு பழமையும் சிறப்பும் வாய்ந்தவள். அத்தகைய தமிழ் அன்னையைப் பாடாத புலவரில்லை. இங்கு மனோன்மணீயம் அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பாவலரேறு அவர்களின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு பார்ப்போம்.

**பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்து:**

* அலைவீசக்கூடிய கடலையே ஆடையாக அணிந்திருக்கிறது இந்த நாடு.
* இந்த நாட்டை பெண்ணாக உருவகம் செய்கிறார்.
* அப்பெண்ணின் நெற்றியிலிட்ட திலகம் மணம் வீசுவதாக கூறுகிறார்.
* உலகிற்கு பாரத நாடு முகமாகத் திகழ்வதாகக் கூறுகிறார்.
* இந்திய நாட்டிற்கு, தென்னாடும் அதிலும் சிறந்த தமிழர்களின் நல்ல திருநாடாகவும் தமிழ்நாடு விளங்குகிறது என்கிறார்.
* அந்தத் திலகத்தில் இருந்துவரும் வாசனைபோல அனைத்து உலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத்திசையிலும் புகழ் மணக்கும்படி இருக்கின்ற பெருமை மிக்கது தமிழ்ப்பெண்ணே என்று தெய்வத்திற்கு இணையாகப் போற்றுகிறார்.
* இன்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பானத் திறமையை வியந்து எங்கள் செயலை மறந்து வாழ்த்துகின்றோம் என்கிறார் மனோன்மணீயம் சுந்தரனார்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



**பாவலரேறு தமிழ் வாழ்த்து :**

* பெருஞ்சித்திரனார் தமிழைப் பழமைக்குப் பழமையாய் தோன்றியவள் என்று பாடுகிறார்.
* கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து நின்று அரசாளும் பேரரசு என்கிறார்.
* பாண்டியனின் மகளாகவும் திருக்குறளின் பெருமைக்குரியவளாகவும் போற்றுகிறார்.
* எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்று இலக்கியங்களையும் காப்பியங்களையும் தன்னுள் கொண்டவள் என்று பாடுகிறார்.
* இறுதியாக, வியக்கத்தக்க அளவிலான நீண்ட காலம் நிலைத்து நின்று எல்லோரும் புகழும்படியாக இருக்கிறது தமிழ். அதைக் கேட்கும் போது மலரில் தேனைக் குடித்துவிட்டு சிறகசைத்துப்பாடும் வண்டினைப் போல் உன்னையும் சுவைக்கிறேன் என்கிறார்.
* அதனால் எங்கள் உள்ளத்தில் இன்பத்தீ பொங்கிஎழ உன் சிறப்புகளை எல்லாத்திசைகளிலும் முழங்குகின்றோம் என்று பாடியுள்ளார்.

> **வீறுடைய செம்மொழி தமிழ்மொழி**
> **உலகம் வேரூன்றிய நாள் முதல் உயர்மொழி! – பெருஞ்சித்திரனார்.**

**முடிவுரை:**

> **தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்**
> **பரவும் வகை செய்தல் வேண்டும்.**

இவ்வாறு தமிழின் பெருமை, பழமை, சிறப்பு, வியப்பு என எல்லாவற்றையும் மனோன்மணீயம் பெ.சுந்தரனார் அவர்களும் பெருஞ்சித்திரனார் அவர்களும் தமிழின் பெருமையைப் போற்றி வாழ்த்துகின்றனர்.

நன்றி. வணக்கம்.

## கூடுதல் வினா

**1. பெருஞ்சித்திரனார் தமிழை எவ்வாறெல்லாம் போற்றுகிறார்?**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| 1. முன்னுரை |
| 2. அழகார்ந்த செந்தமிழே! |
| 3. தமிழின் பெருமை |
| 4. முடிவுரை |

**தமிழுக்கும் அமுதென்று பேர்**

**முன்னுரை:**

அமுதமான மொழி தமிழ். உலகின் மூத்த மொழி, செம்மொழி என்றெல்லாம் சான்றோர்களால் புகழப்பட்டமொழி இங்குத் தமிழ் மொழியின் பெருமையை பாவலரேறு அன்னை மொழியே என்று விளித்துப் போற்றுவதைக் காணலாம்.

**அழகார்ந்த செந்தமிழே!**

* என் தாய்க்கு நிகரான மொழி
* அழகாக அமைந்த செம்மைமொழி
* பழமைக்குப் பழமையாய் தோன்றிய நல்ல மணம் வீசும் கனி போன்ற மொழி
* கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட உலகப் பேரரசான மொழி
* பாண்டிய மன்னனின் மகளாக வீற்றிருந்தவள்!
* திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியதாக உள்ள மொழி!
* பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்றெல்லாம் தமிழை அழைக்கிறார்.

**தமிழின் பெருமை:**

* செழுமையானது தமிழ்
* எமக்குள் வாழும் உயிர் போன்றது தமிழ்மொழி
* விரிவாகக் கூறமுடியாத அளவிற்கு பெரும் பெருமைகளை உடைய மொழி
* இலக்கிய வளத்துடனும், நீண்ட கால நிலைப்பு தன்மையும், எல்லோரும் புகழும் சிறப்பும் உடையது.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



முடிவுரை:

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்

என்று பாவேந்தர் கூறுவது போல, செந்தாமரையில் உள்ள தேனைக் குடித்துவிட்டு சிறகசைத்துப் பாடும் வண்டினைப் போல் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் பற்றுணர்வுப் பொங்கி எழ, உன் சிறப்பை எல்லா இடங்களிலும் முழங்குவதில் பெருமையடைகிறேன் என்று பாடுகிறார் பெருஞ்சித்திரனார்.

## அரசு தேர்வு வினாக்கள்

**1. "அன்னை மொழியே" கவிதை இடம் பெறும் நூல்** — காலாண்டுத் தேர்வு 2019

அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு
இ) எண்சுவை ஈ) பாவியக்கொத்து

விடை **ஆ) கனிச்சாறு**

**2. 'தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!'.** — முதல் தி.தேர்வு 2022
**பாடல் அடியில் தென்னன்' என்று குறிப்பிடப்படும் மன்னன் :**

அ) சேர மன்னன் ஆ) பாண்டிய மன்னன்
இ) சோழ மன்னன் ஈ) பல்லவ மன்னன்

விடை **ஆ) பாண்டிய மன்னன்**

**3. "சாகும் போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும்" – என்று முழங்கியவர்?** — ஆகஸ்ட்–2022

அ) பெருஞ்சித்திரனார் ஆ) க. சச்சிதானந்தன் இ) பாவாணர் ஈ) க. அப்பாத்துரையார்

விடை **ஆ) க. சச்சிதானந்தன்**

### குறுவினா

**1. "மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!** — அ.மா.வி 2019
**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!"**
**மண்ணுலகப் பேரரசு ....... தென்னன் மகள் ....... திருக்குறளின் மாண்புகழ் ......... மூன்று இடங்களுக்குமான ஒரே விடை என்ன? பாடலின் ஆசிரியர் யார்?**

(i) செந்தமிழ் (ii) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

**2. அன்னை மொழியான தமிழை வாழ்த்தும் வாழ்த்துச் சொற்கள் இரண்டினை எழுதுக.** — காலாண்டுத் தேர்வு 2019

(i) பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே, பாண்டிய மன்னனின் மகளே!
(ii) திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே!

**3. பாவலரேறு பெருஞ்சித்திரனார் படைத்த நூல்களுள் எவையேனும் இரண்டின் பெயர்களை எழுதுக.** — முதல் தி.தேர்வு 2022

**பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள்:** உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, ஐயை எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் முதலியன.

**4. எட்டுத்தொகை நூல்களின் பெயர்களை எழுதுக.** — முதல் தி.தேர்வு 2022

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

### பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. — செப்.–2021, மே–2022

"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின் பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரை விரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்."

**1. 'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் :**

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

விடை **இ) எம் + தமிழ் + நா**

**2. 'செந்தமிழ்' என்பது :**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

விடை **அ) பண்புத்தொகை**

**3. 'உள்ளுயிரே' என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?**

அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை
இ) தாய்நாட்டை ஈ) தம் குழந்தையை

விடை **ஆ) தமிழ் மொழியை**



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



4. 'வேறார் புகழுரையும்' - இத்தொடரில் 'வேறார்' என்பது :

அ) தமிழர் ஆ) சான்றோர்
இ) வேற்று மொழியினர் ஈ) புலவர்

விடை இ) வேற்று மொழியினர்

## கற்பவை கற்றபின்

1. ''நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத்தொகை''

**இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத் தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.**

(i) **நற்றிணை :** நல் + திணை / நன்மை + திணை. 'நல்' என்னும் அடைமொழியும் அகப்பொருள் ஒழுக்கத்தைச் சுட்டும் 'திணை' என்னும் பெயரும் சேர்ந்து 'நற்றிணை' என்னும் பெயர் பெற்றது.

(ii) **குறுந்தொகை :** குறுமை + தொகை. குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால் குறுந்தொகை எனப் பெயர்பெற்றது.

(iii) **ஐங்குறுநூறு :** ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைத் திணை குறித்த குறுகிய நூறு பாடல்களாகத் தொகுக்கப்பட்டதால் 'ஐங்குறுநூறு' எனப் பெயர் பெற்றது.

(iv) **பதிற்றுப்பத்து :** சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய தொகுப்பு நூலாகும். ஒரு மன்னருக்குப் பத்துப் பாடல்கள் என்னும் முறையில் நூறு பாடல்களைக் கொண்டுள்ளதால் 'பதிற்றுப்பத்து' எனப் பெயர் பெற்றது.

(v) **பரிபாடல் :** வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களுக்கும், பல வகை அடிகளுக்கும் பரிந்து இடங்கொடுத்து பரிந்து செல்லும் ஓசையையுடைய பரி பாட்டுகளின் தொகுப்பாக விளங்குவதால் இது 'பரிபாடல்' என்று அழைக்கப்படுகிறது.

(vi) **கலித்தொகை :** ஓசை இனிமையும், தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் சிறப்பான அமைப்புகளையும், கொண்ட கலிப்பாக்களால் அமைந்த நூலாதலால் கலித்தொகை எனப் பெயர் பெற்றுள்ளது.

(vii) **அகநானூறு :** அகம் + நான்கு + நூறு – அகநானூறு. அகப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் 'அகநானூறு' எனப் பெயர் பெற்றது.

(viii) **புறநானூறு :** புறம் + நான்கு + நூறு – புறநானூறு. இது புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் 'புறநானூறு' எனப் பெயர் பெற்றது.

2. **''எந்தமிழ்நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்'' என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்து நிமிட உரை நிகழ்த்துக.** முதல் தி.தேர்வு 2022

உலகில் உள்ள தொன்மையான மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று என்றால் மிகையாகாது. இன்றும் எழுத்தளவிலும் பேச்சளவிலும் தன் தொன்மையைக் காத்து சீரும் சிறப்போடும் வாழ்ந்து கொண்டிருக்கிறது நம் தமிழ் மொழி.

தமிழ்மொழி தொன்மை, எளிமை, ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, பெருமை, இயன்மை, வியன்மை எனப் பலவகை பெருமைகளை ஒருங்கேயுடையது என்கிறார் ஞா.தேவநேயப் பாவாணர்.

முண்டாசு கவிஞன் மகாகவி பாரதி அவர்கள்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்" என்றார்.

அந்தளவிற்குத் தமிழ்மொழியின் பெருமையை உலகறியும். மேலும் தமிழ்மொழி இயற்கையாகவே பேசுவதற்கு எளிமையாக அமைந்திருப்பதால் நாம் தமிழ் எழுத்துகளை எளிதாக உச்சரிக்கலாம்.தமிழின் சிறப்பை உணர்ந்த மேலைநாட்டு அறிஞர் டாக்டர் ஜி.யு.போப்., தமிழை நன்கு கற்று அதன் சிறப்பினை உணர்ந்ததால் தமது கல்லறையில் "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என்று பொறிக்கச் செய்தார்.

உலகின் மூத்த மொழி தமிழ்மொழி. மூத்தக்குடி வளர்த்த மொழியாம் தமிழ்மொழி மற்ற மொழிகளைக் காட்டிலும் இனிமையும், பெருமையும் பல்வேறு இலக்கிய தொன்மைகளையும் இயல், இசை, நாடகம் என்று முத்தமிழ் கொண்ட மொழியாம் நம் தமிழ் மொழி, தமிழ்மொழிக்கு ஈடு இணை இவ்வுலகில் எந்த மொழியும் இல்லையென பெருமையாக எடுத்துரைப்பேன். எந்தன் தமிழின் பெருமையை உலக அரங்கு முழுக்க எடுத்துரைப்பேன் அதுவே நான் செய்த பாக்கியம் என்று பலரும் கூறுகின்றனர்.

☆☆☆



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



# அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(4 × 1 =4 )**

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது–
   - அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
   - ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
   - இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
   - ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
2. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
   - அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
   - இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
3. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள், இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது –
   - அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
   - இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே–
   - அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய
   - இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** **(2 × 2 = 4)**

5. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
6. பூவின் நிலைகளை எழுதுக.
7. 'மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!' – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
8. முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன?

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளிக்க.** **(2 × 3 = 6)**

9. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.
10. ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்களை விளக்குக.
11. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

**IV. அடிபிறழாமல் எழுதுக.** **(1 × 3 = 3)**

12. 'அன்னை மொழியே' – எனத் தொடங்கும் பாடலை அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.

**V. விடையளி (ஏதேனும் ஒன்று).** **(1 × 8 = 8)**

13. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.
14. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

☆ ☆ ☆



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



## திறன் அறிவோம் - புத்தக வினா

**குறுவினா :** கேள்வி எண்: 1 புத்தக பக்கம் எண்: 43

**1. 'நமக்கு உயிர் காற்று**
**காற்றுக்கு வரம் மரம் – மரங்களை**
**வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' – இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.** அ.மா.வி 2019; பிடிஏ–1

(i) மரங்களை வளர்த்திடு! காற்றெனும் வரப்பிரசாதம் பெற்றிடு!

(ii) காற்று மாசை ஒழித்திடுவோம்!
தூய காற்றைச் சுவாசித்திடுவோம்!
நோயற்ற வாழ்வு வாழ்ந்திடுவோம்!

## கூடுதல் வினாக்கள்

**1. உயிரினங்களின் முதன்மைத் தேவைகள் யாவை?**
மூச்சுக்குக் காற்று, தாகத்திற்கு நீர், உறைவதற்கு நிலம், ஒளிக்குக் கதிரவன் போன்றவை உயிரினங்களின் முதன்மைத் தேவைகள் ஆகும்.

**2. காற்றின் தன்மை யாது?**
(i) காற்றைக் கண்களால் காண முடியாது.
(ii) மெய்யினால் உணரமுடியும்.
(iii) காற்று உயிர்களின் உயிர் மூச்சாகும்.
(iv) காற்றினால் மழை வரும்; பருவ மாற்றங்கள் ஏற்படும்.

**3. பிற்கால ஔவையார் காற்றை எவ்வாறு சிறப்பித்துள்ளார்?**
பிற்கால ஔவையார் தம் குறளில் வாயுதாரணை என்னும் அதிகாரத்தில்,
"வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்
ஆயுள் பெருக்கம் உண் டாம்"
என்று காற்றைச் சிறப்பித்துள்ளார்

**4. திசைகளின் அடிப்படையில் காற்றின் வேறு பெயர்கள் யாவை?**
(i) கிழக்கிலிருந்து வீசுவது கொண்டல்
(ii) மேற்கிலிருந்து வீசுவது கோடை
(iii) வடக்கிலிருந்து வீசுவது வாடை
(iv) தெற்கிலிருந்து வீசுவது தென்றல்

**5. காற்றின் வேறு பெயர்கள் யாவை?**
**காற்றின் வேறு பெயர்கள் :** காற்று, வளி, தென்றல், புயல், சூறாவளி.

**6. காற்றையும் கரிகால் பெருவளத்தானையும் தொடர்புப்படுத்தி வெண்ணிக்குயத்தியார் கூறியது யாது?**
பழங்காலத்தில் காற்றின் உதவியால் பாய்மரக் கப்பல்கள் மூலம் கடல் கடந்து பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன.
"நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!
களிஇயல் யானைக் கரிகால் வளவ" (புறம்)
எனக் கரிகால் பெருவளத்தானைப் புகழ்ந்து பாடிய சங்ககாலப் பெண் புலவர் வெண்ணிக்குயத்தியார் 'வளி' எனக் குறிப்பிட்டுச் சிறப்புச் செய்திருக்கிறார்.

**7. புவியின் உயிர்ச் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க காற்று எவ்வாறு உதவுகிறது?**
(i) காற்று உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கின்றது.
(ii) விதைகளை எடுத்துச் சென்று பல இடங்களிலும் தூவுகின்றது.
(iii) பூவின், தேனின், கனியின், தாவரத்தின், உயிரினத்தின் மணத்தைச் சுமந்து புவியின் உயிர்ச்சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க காற்று உதவுகின்றது.

**8. மின்னாற்றல் குறிப்பு வரைக.**
(i) "காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக் கொள்" என்ற புதுமொழிக்கேற்றார் போல் காற்றைப் பயன்படுத்தி மின்னாற்றல் உருவாக்கப்படுகிறது.
(ii) இதனால் நிலக்கரியின் தேவை குறைந்து கனிம வளங்கள் பாதுகாக்கப்படுகிறது.
(iii) உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடமும் இந்தியாவில் தமிழகம் முதலிடமும் வகிக்கிறது.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



9. **சிறுவர் நிதியம் (UNICEF) காற்று மாசுபாடு பற்றிக் கூறியது யாது?**

காற்று மாசுபடுவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைவதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவிக்கிறது

10. **மேற்கு அல்லது கோடை காற்று - குறித்து எழுதுக.**

(i) மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசுவது கோடைக் காற்று.
(ii) வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக்காற்று என்றும் அழைக்கப்படுகிறது.

11. **வடக்கு அல்லது வாடைக் காற்று - குறித்து எழுதுக.**

(i) வடக்கிலிருந்து வீசுவது வாடைக்காற்று.
(ii) பனிப்பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக்காற்று என்றும் அழைக்கப்படுகிறது.

12. **காற்றின் வேகம் குறித்து புறநானூறு கூறுவது யாது?**

(i) காற்றின் ஆற்றலை வளி மிகின் வலி இல்லை (புறம் 51) என்று ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார்.
(ii) மதுரை இளநாகனாரும் கடுங்காற்று மணலைக் கொண்டுவந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகம் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

13. **பருவக் காற்றின் வகைகளை எழுதுக.**

பருவக்காற்று இரண்டு வகைப்படும். தென்மேற்குப் பருவக்காற்று, வடகிழக்குப் பருவக்காற்று

14. **காற்று மாசினால் ஏற்படும் நோய்கள் யாவை?**

(i) கண் எரிச்சல் (ii) தலைவலி (iii) தொண்டைக் கட்டு
(iv) காய்ச்சல் (v) நுரையீரல் புற்றுநோய் (vi) இளைப்பு நோய்

15. **ஓசோன் படல ஓட்டையினால் ஏற்படும் விளைவுகள் யாவை?**

(i) ஓசோன் படலம் ஓட்டையாவதால் சூரியனிடமிருந்து வரும் புற ஊதா கதிர்கள் நேரடியாக மனிதன் முதலான உயிர்களைத் தாக்குகிறது.
(ii) இதனால் கண்கள் மற்றும் தோலும் பாதிப்படைகின்றன.

16. **குளோரோ புளோரோ கார்பன் குறித்து எழுது.**

(i) குளிர்ப்பதனப் பெட்டி முதலான இயந்திரங்கள் இந்த நச்சுக் காற்றை வெளியிடுகின்றன.
(ii) இந்த நச்சுக் காற்று ஓசோன் படலத்தை ஓட்டையிடுகின்றது.
(iii) குளோரோ புளோரோ கார்பனின் ஒரு மூலக்கூறு ஒரு இலட்சம் ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்துவிடும் ஆற்றல் கொண்டது.

## திறன் அறிவோம் - புத்தக வினா

**சிறுவினா :** கேள்வி எண்: 1 புத்தக பக்கம் எண்: 44

1. **உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால்... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.**

அ.மா.வி 2019; பிடிஏ–6; செப்.–2020

(i) வான்பொழியும் நீரே உயிர்ப்பு.
(ii) உயிராக நான், பல பெயர்களில் நான், பல சுவைகளில் நான்.
(iii) என்னைப் போற்றும் வள்ளுவர், என்னைப் பாடாத புலவரில்லை, காட்டைத்திருத்தி என்னைத் தேக்கினான்.
(iv) இலக்கியங்களில் நான், என்னைத் தேக்கி வைத்த தமிழன்.
(v) பாசனத்திற்கு நான், சேமிப்பும் தேவை சிக்கனமும் தேவை. அதனால் என்னை மாசுபடுத்தாதீர்.

## கூடுதல் வினாக்கள்

1. **காற்றின் வேறு பெயர்கள் யாவை? காற்று பருவநிலை சூழல், வீசும் வேகம் இதனைப் பொருத்து அழைக்கப்படும் பல்வேறு பெயர்களைக் கூறுக.**

**காற்றின் வேறு பெயர்கள் :** காற்று, வளி, தென்றல், புயல், சூறாவளி.

**பருவநிலை சூழல் வீசும் வேகம் இவற்றால் பெற்ற பெயர்கள் :**

(i) தென்றல் காற்று (ii) பூங்காற்று (iii) கடல் காற்று (iv) பனிக்காற்று
(v) வாடைக்காற்று (vi) மேல்காற்று (vii) கீழ்க்காற்று (viii) புழுதிக்காற்று
(ix) ஆடிக்காற்று (x) கடுங்காற்று (xi) புயல்காற்று (xii) பேய்க்காற்று
(xiii) சுழல்காற்று (xiv) சூறாவளிக் காற்று (xv) மென்காற்று
(xvi) இளந்தென்றல் எனப் பல்வேறு பெயர்களைப் பெற்றுள்ளது.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



**2. காற்று திசையினால் பெற்ற பெயர்களையும் அவற்றின் தன்மைகளையும் விளக்குக.**

(i) **கிழக்கு :** கிழக்கு என்பதற்குக் குணக்கு என்று பெயர். கிழக்கிலிருந்து வீசும் போது கொண்டல் எனப்படுகிறது. இது குளிர்ச்சியையும் மழையையும் தருவதால் மழைக்காற்று எனப்படுகிறது.

(ii) **மேற்கு :** மேற்கு என்பதற்குக் குடக்கு என்று பெயர். மேற்கிலிருந்து வீசும் போது கோடை எனப்படுகிறது. அதிக வலிமையுடன் வீசும். வறண்ட நிலத்தில் இருந்து வீசுவதால் வெப்பக்காற்றாகிறது.

(iii) **வடக்கு :** வடக்கு என்பதற்கு வாடை என்று பெயர். வடக்கிலிருந்து வீசும் போது வாடைக்காற்று எனப்படுகிறது. பனிப்பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக்காற்று என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது.

(iv) **தெற்கு :** தெற்கிலிருந்து வீசும் காற்று தென்றல் எனப்படும். இது மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்து இதமான காற்றாக வீசுகிறது.

**3. காற்று இலக்கியங்களில் எவ்வாறு கையாளப்படுகிறது?**

(i) தென்றலாகப் பலவித மலர்களின் நறுமணத்தை அள்ளி வரும்போது கூடவே வண்டுகளையும் அழைத்து வருவதால் இளங்கோவடிகள் காற்றை "வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்" என்று தம் சிலப்பதிகாரத்தில் நயமாகக் கூறுகிறார்.

(ii) பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் எழுதிய பத்மகிரிநாதர் 'தென்றல் விடுதூது' என்னும் சிற்றிலக்கியத்தில்

"நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பிற்
செந்தமிழின் பின்னுதித்த தென்றலே"

எனப் பெண்ணொருத்தி தூது செல்ல காற்றை அன்போடு அழைப்பதாகப் பாடப்பட்டுள்ளது.

"நதியில் விளையாடிக் கொடியில் தலை சீவி நடந்த இளந்தென்றலே."

எனப் பலவாறாக இன்றளவும் இலக்கியப் படைப்புகளிலும் திரையிசைப் பாடல்களிலும் காற்று இடம் பிடித்துள்ளது.

**4. காற்று மாசுபாடு - குறித்து எழுதுக.**

(i) உலக உயிர்களின் ஆணிவேர் காற்று. நாம் காற்றை ஒவ்வொரு விநாடியும் மாசுபடுத்திக் கொண்டிருக்கிறோம்.

(ii) குப்பைகள், நெகிழிப் பைகள், மெது உருளைகள் போன்றவற்றை எரிப்பது, குளிர்சாதனப்பெட்டி, குளிரூட்டப்பட்ட அறை ஆகியவற்றை மிகுதியாகப் பயன்படுத்துவதால் காற்று மாசடைகிறது.

(iii) பட்டாசு வெடிப்பது, புகை வடிகட்டி இல்லாமல் தொழிற்சாலை இயக்குவது, தனிமனித ஊர்திப்பயன்பாடு, வானூர்திகளின் புகை, என அனைத்துச் செயல்பாடுகளாலும் காற்று மாசுபடுகிறது.

(iv) இதனால் பலவிதமான நோய்களும் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.

## திறன் அறிவோம் - புத்தக வினா

**நெடுவினா :** கேள்வி எண்: 3 — புத்தக பக்கம் எண்: 44

அ.மா.வி 2019

**3.** **மலர்ந்தும் மலராத பாதிமலர் போல**
**வளரும் விழி வண்ணமே - வந்து**
**விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக**
**விளைந்த கலை அன்னமே**
**நதியில் விளையாடி கொடியில் தலைசீவி**
**நடந்த இளந்தென்றலே - வளர்**
**பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு**
**பொலிந்த தமிழ் மன்றமே**

**- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.**

(i) இப்பாடலில் தவழும் காற்று - தென்றல்.

(ii) தெற்கிலிருந்து வீசுவதால் இது தென்றல் காற்று என்று அழைக்கப்படுகிறது.

(iii) இக்காற்று மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்த இதமான இயல்புடையதாக இருக்கும்.

**கவிதை நயம் :**

(i) குழந்தை தூக்கத்திலிருந்து விழிக்கும்போதோ, தூங்குவதற்கு முன்போ, பாதி கண்களைத் திறந்தும் மூடியும் இருக்கும் நிலைக்குப் பூவும் அல்லாமல் மொட்டும் அல்லாமல் இருக்கும் மலரை உவமையாக்குகின்றார்.

(ii) அடுத்த வரியில் விடிந்தும் விடியாத என்று பாடியுள்ளார். இதில் பொழுது விடிவது என்பது விடிந்த பின் அனைவராலும் அறிய முடியும். இருள் விலகி வெளிச்சம் வரும் அந்த நொடியைக் குழந்தைக்கு உவமை யாக்கியுள்ளார்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



(iii) தென்றல் காற்று ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பலவற்றைக் கடந்து வருவதை நதியில் விளையாடி செடிகொடிகளில் தலைசீவிக் கொள்கின்றது என்று நயத்துடன் பாடியுள்ளார்.

(iv) தமிழ்மொழியின் தொடக்கம் பொதிகை மலைதான் என்பது அனைவரும் அறிந்தது. அங்கு தோன்றிய தமிழ் மதுரை நகரில் வந்து சிறப்புற்றதாகக் கூறுகின்றார். மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்ததையே கவிஞர் 'தமிழ் மன்றம்' என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கவிஞர் கண்ணதாசன் தம்முடைய பாடல்களில் சிறந்த கவிதை நயத்தைச் சேர்த்துள்ளார்.

## கூடுதல் வினா

1. **'காற்றின் பயன்கள்' என்னும் தலைப்பில் கேட்கிறதா என்குரல் என்ற உரைநடை பகுதி வழி நின்று நிறுவுக.**

**காற்றே உலகின் ஆற்றல்**

**முன்னுரை:**

உயிரின வாழ்வின் அடிப்படை இயற்கை! இயற்கையின் கூறுகளில் காற்றின் பங்கு கூடுதலானது. காற்றே எங்கும் நிறைந்திருக்கிறது. உணவின்றி ஐந்துவாரம் உயிர்வாழ முடியும். நீரின்றி ஐந்து நாள் உயிர் வாழ முடியும். ஆனால் காற்றின்றி ஐந்து நிமிடம் கூட உயிர்வாழ முடியாது. இத்தகைய காற்றின் பயன்கள் குறித்துக் காண்போம்.

**பருவக்காற்று:**

(i) பருவக்காற்று காலங்களில் மேகத்தைக் கொண்டுவந்து மழையாகத் தருகிறது.

(ii) தென்மேற்கு, வடகிழக்குப் பருவக்காற்றாக உலா வந்து மேகத்தைக் குளிர்வித்து மழையாகப் பொழிகிறது.

(iii) கதிரவனின் வெப்பத்தால் சூடாகி, அடர்த்தி குறைந்து மேலே செல்லும் காற்று வெற்றிடத்தை நிரப்பியும் பருவக்காற்றாக மாறுகிறது.

(iv) ஜூன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவக்காற்றாகவும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக்காற்றாகவும் வீசுகிறது.

(v) இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையளவினைத் தென்மேற்குப் பருவக்காற்று வழங்குகிறது.

**இலக்கியத்தில் காற்று:**

(i) "வளி மிகின் வலி இல்லை" என்று புறநானூற்றில் 51வது பாடலில் ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார்.

(ii) புறநானூற்றில் 55வது பாடலில் கடுங்காற்று மணலைக் கொண்டுவந்து சேர்க்கிறது என்று மதுரை இளநாகனார் காற்றின் வேகத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**காற்றின் ஆற்றல்:**

(i) உயிர்வளி தந்து உயிரைக் காக்கிறது.

(ii) தாவரங்களின் ஒளிச்சேர்க்கையில் உணவு உற்பத்திக்கு உதவுகிறது.

(iii) விதைகளைப் பலவிடங்களில் எடுத்துச் சென்று தூவுகிறது.

(iv) புவியில் உயிர்ச் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகிறது.

(v) நவீன தொலைத் தொடர்பின் மையமாகவும் இருக்கிறது.

(vi) புதுப்பிக்கக் கூடிய ஆற்றலாக விளங்கும் காற்றைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்க முடிகிறது.

(vii) இதனால் நிலக்கரியின் தேவை குறைந்து கனிம வளங்கள் பாதுகாக்கப்படக் காரணமாகிறது.

**முடிவுரை:**

**உயிரின் ஓசை – காற்றின் ஓசை**

இப்படி உலக உயிர்களின் ஆற்றலாக, மூலமாக விளங்கும் காற்றை மாசுபடுத்தாமல் வளமுடன் வாழ வேண்டும் ஜூன் 15 நாம் உலக காற்று நாளாகக் கொண்டாடுகிறோம். ஒரு நாள் மட்டும் கொண்டாடினால் போதாது. ஒவ்வொரு நாளும் நாம் கொண்டாட வேண்டும். நாம் ஒவ்வொருவரும் காற்றை மாசுபடுத்தாமல், தூய்மையாக வைத்து உலகின் எதிர்கால நலனுக்கு வித்திடுவோம்.

### விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க :

1. **விடை: திருமூலர் தம் திருமந்திரத்தில் மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீடிக்கும் என்று கூறியுள்ளார்.**
   வினா: திருமூலர் தம் திருமந்திரத்தில் யாது கூறியுள்ளார்?

2. **விடை: மேற்கிலிருந்து வீசும் காற்று 'கோடை' எனப்படுகிறது.**
   வினா: மேற்கிலிருந்து வீசும் காற்றின் பெயர் என்ன?

3. **விடை: பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் இயற்றிய நூல் பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது ஆகும்.**
   வினா: பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது நூலை இயற்றியவர் யார்?



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



4. **விடை:** **கிரேக்க அறிஞர் "ஹிப்பாலஸ்" என்பவர் பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்.**
 **வினா:** பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்திய கிரேக்க அறிஞர் யார்?
5. **விடை:** **ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.**
 **வினா:** உலகக் காற்று நாளாக நாம் கொண்டாடும் நாள் எது?

**நிறுத்தற்குறியிடுக :**

1. **மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா சிந்துக்குத் தந்தை என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர்**
 மகாகவி சுப்பிரமணிய பாரதியார், 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா,' 'சிந்துக்குத் தந்தை' என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர்.
2. **ஓடி வாருங்கள் இங்கே ஓடி வாருங்கள் என்றான் பாண்டியன்**
 "ஓடி வாருங்கள்! இங்கே ஓடி வாருங்கள்"! என்றான் பாண்டியன்.
3. **வளி தென்றல் புயல் சூறாவளி எனப் பல்வேறு பெயர்களால் காற்று அழைக்கப்படுகிறது**
 வளி, தென்றல், புயல், சூறாவளி எனப் பல்வேறு பெயர்களால் காற்று அழைக்கப்படுகிறது.

**வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக :**

1. **வடக்கு பருவ காற்றாக உலா வந்து மேகத்தை குளிர்வித்து மழையாக பொழிகின்றேன்.**
 வடக்குப் பருவக்காற்றாக உலா வந்து மேகத்தைக் குளிர்வித்து மழையாகப் பொழிகின்றேன்.
2. **அதிக்காலை எழுந்துப் பின் உடற்பயிற்சியைக் மேற்கொண்டால் உடல் நலம் பெறும்.**
 அதி காலை எழுந்து பின் உடற்பயிற்சியை மேற்கொண்டால் உடல் நலம் பெறும்.
3. **மனதுத் தொடர்பான கல்வியை பயிற்றுவிப்பது எதிர்கால சமுதாயத்தை காக்க பயன்படும்.**
 மனது தொடர்பான கல்வியைப் பயிற்றுவிப்பது எதிர்காலச் சமுதாயத்தைக் காக்க பயன்படும்.
4. **இயற்கையை பற்றிய விழிப்புணர்வு என்பது மனிதர்களுக்கு பயன்படுவது மட்டுமின்றி பிற உயிர்களுக்கும் பயன்படும்.**
 இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வு என்பது மனிதர்களுக்குப் பயன்படுவது மட்டுமின்றிப் பிற உயிர்களுக்கும் பயன்படும்.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

1. **உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்றவர்** — காலாண்டுத் தேர்வு 2019
 அ) திருமூலர் ஆ) அகத்தியர்
 இ) வள்ளுவர் ஈ) தொல்காப்பியர்
 **விடை** **ஈ) தொல்காப்பியர்**
2. **"காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" – இப்பழமொழி உணர்த்தும் பொருள்** — பிடிஏ–6; அரையாண்டுத் தேர்வு 2019
 அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்.
 ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.
அ) ஏவல் விடை ஆ) வினா எதிர் வினாதல் விடை
இ) உற்றது உரைத்தல் விடை ஈ) இனமொழி விடை

13. **பொருள்கோள் எத்தனை வகைப்படும்?**
அ) ஐந்து ஆ) ஆறு இ) ஏழு ஈ) எட்டு



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



**விடைகள் :**
1. ஆ) ஆறு
2. அ) அறிவினா
3. ஆ) அறியாவினா
4. ஆ) ஐயவினா
5. இ) கொளல்வினா
6. ஆ) கொடைவினா
7. இ) ஏவல்வினா
8. இ) எட்டு
9. அ) உற்றது உரைத்தல் விடை
10. ஈ) ஏவல் விடை
11. ஆ) உறுவது கூறல்
12. ஆ) வினா எதிர் வினாதல் விடை
13. ஈ) எட்டு
14. ஆ) 4, 1, 2, 3
15. ஆ) நிரல்நிறைப் பொருள்கோள்
16. அ) முறை நிரல்நிறைப் பொருள்கோள்
17. இ) எதிர்நிரல் நிறைப் பொருள்கோள்
18. ஈ) கொண்டுகூட்டுப் பொருள்கோள்
19. ஆ) நன்னூல்
20. இ) ஆற்று நீர்
21. ஈ) நிரல் நிறை
22. ஆ) ஏவல்
23. இ) இனமொழி விடை
24. அ) இந்தக் கவிதையின் பொருள் யாது? - அறியா வினா
25. அ) சுட்டு, மறை
26. ஆ) நேர்
27. ஈ) இனமொழி

## திறன் அறிவோம் - புத்தக வினா

**குறுவினா** | கேள்வி எண்: 5 | புத்தக பக்கம் எண்: 122

**4. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.** பிடிஏ–3

(i) மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? **– அறியா வினா**

(ii) சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லை, மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? **– ஐய வினா**

## கூடுதல் வினாக்கள்

**1. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**வினா ஆறு வகைப்படும் :** அவை - அறி வினா, அறியா வினா, ஐய வினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா.

**2. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**விடை எட்டு வகைப்படும் :** அவை - சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை

**3. குறிப்பு விடைகள் எவை?**

ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை ஆகிய ஐந்தும் குறிப்பு விடைகள் ஆகும்.

**4. பொருள்கோள் என்றால் என்ன?**

செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்குப் பொருள்கோள் என்று பெயர்.

**5. நிரல் நிறைப் பொருள் கோள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

நிரல் நிறைப் பொருள்கோள் இரண்டு வகைப்படும். அவை முறை நிரல்நிறைப் பொருள்கோள், எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்.

**6. சுட்டு விடை என்றால் என்ன ?**

கடைத்தெரு எங்குள்ளது? – என்ற வினாவிற்கு வலப்பக்கத்தில் உள்ளது எனச்சுட்டிக் கூறும் **விடை சுட்டுவிடை ஆகும்.**

**7. மறைவிடை - விளக்குக.**

**கடைக்குப் போவாயா?** என்ற கேள்விக்குப் போகமாட்டேன் என மறுத்துக் கூறுவது **மறைவிடையாகும்.**

**8. நேர்விடை என்றால் என்ன?**

**கடைக்குப் போவாயா?** என்ற கேள்விக்குப் 'போவேன்' என்று உடன்பட்டுக் கூறல் **நேர்விடையாகும்.**

**9. ஏவல் விடை விளக்குக.**

"**இது செய்வாயா?** என்று வினவிய போது, நீயே செய்" என்று கூறுவது. அதாவது மாட்டேன் என்று மறுப்பதை **ஏவலாகக் கூறும்.**

**10. வினா எதிர் வினாதல் விடை - என்றால் என்ன?**

**என்னுடன் ஊருக்கு வருவாயா?** என்ற வினாவிற்கு 'வராமல் இருப்பேனா?' என்று வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது **வினா எதிர் வினாதல் விடை** ஆகும்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**11. உற்றது உரைத்தல் விடை விளக்குக.**

**நீ விளையாடவில்லையா?** என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கிறது' என்று வினாவிற்கு விடையாக ஏற்கனவே நேர்ந்ததை கூறுவது உற்றது உரைத்தல் விடை ஆகும்.

**12. உறுவது கூறல் விடை என்றால் என்ன?**

**நீ விளையாடவில்லையா?** என்று கேட்கப்பட்ட வினாவிற்குக் 'கால் வலிக்கும்' என்று வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறுவதே உறுவதுகூறல் விடை ஆகும்.

**13. இனமொழி விடை என்றால் என்ன?**

**உனக்குக் கதை எழுதத் தெரியுமா?** என்ற வினாவிற்குக் "கட்டுரை எழுதத் தெரியும்" என்று வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறுதல் இனமொழி விடையாகும்.

**14. அறிவினா என்றால் என்ன?**

**தான் விடை அறிந்திருந்தும்,** அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவுவது அறிவினா ஆகும். **சான்று :** மாணவரிடம் இந்தக் கவிதையின் பொருள் யாது? என்று ஆசிரியர் கேட்டல்.

**15. அறியாவினா என்றால் என்ன?**

தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது அறியாவினா ஆகும்.

**சான்று :** ஆசிரியரிடம்; இக்கவிதையின் பொருள் யாது? என்று மாணவர் கேட்டல்.

**16. ஐய வினா என்றால் என்ன?**

ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது ஐயவினா ஆகும்.

**சான்று :** 'இச்செயலைச் செய்தது செல்வியா, மோகனா? என வினவுதல்.

**17. கொளல் வினா – விளக்குக.**

தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது கொளல் வினா ஆகும்.

**சான்று :** 'வைரமுத்துக் கவிதைகள் இருக்கிறதா? என்று நூலகரிடம் கேட்டல்.

**18. கொடை வினா – என்றால் என்ன?**

பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது கொடை வினா ஆகும்.

**சான்று :** புலவரே உம்மிடம் பொருள் இருக்கிறதா? என்று மன்னன் கொடுப்பதற்காகப் புலவரிடம் கேட்டல்.

**19. ஏவல் வினா என்றால் என்ன?**

ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டு வினவுவது ஏவல் வினா ஆகும்.

**சான்று :** வீட்டில் தேன் இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா? என்று தாய் மகனிடம் வினவி வேலையைச் சொல்லுதல்.

## திறன் அறிவோம் - புத்தக வினா

**சிறுவினா** | கேள்வி எண்: 4 | புத்தக பக்கம் எண்: 122

**4. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும். – இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.**

இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோள் ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

**பொருள்கோள் விளக்கம் :** பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைவது ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

**பொருத்தம் :** முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருக செய்யும். முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும். குறட்பா தொடக்கம் முதல் முடிவு வரை நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளதால் ஆற்றுநீர்ப் பொருள்கோளாயிற்று.

## கூடுதல் வினாக்கள்

**1. பொருள்கோள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பொருள்கோள் எட்டு வகைப்படும். அவை

(i) ஆற்றுநீர்ப் பொருள்கோள்
(ii) மொழிமாற்றுப் பொருள்கோள்
(iii) நிரல் நிறைப் பொருள்கோள்
(iv) விற்பூட்டுப் பொருள்கோள்
(v) தாப்பிசைப் பொருள்கோள்
(vi) அளைமறிபாப்புப் பொருள்கோள்
(vii) கொண்டுகூட்டுப் பொருள்கோள்
(viii) அடிமறி மாற்றுப் பொருள்கோள் ஆகியன.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

### சிறுவினா

**1. குறிஞ்சி நிலத்திற்கு உரிய நிலம், பெரும்பொழுது, சிறுபொழுது, கருப்பொருளை விளக்குக.**

**குறிஞ்சி நிலத்திற்கு உரியவை :**

| | | |
|---|---|---|
| (i) | நிலம் | மலையும் மலை சார்ந்த இடமும் |
| (ii) | பெரும்பொழுது | குளிர்காலம், முன்பனிக் காலம் |
| (iii) | சிறுபொழுது | யாமம் |

**குறிஞ்சி நிலத்தின் கருப்பொருள்கள் :**

| | | | |
|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | மக்கள் | வெற்பன், குறவன், குறத்தியர் |
| உணவு | மலை நெல், தினை | விலங்கு | புலி, கரடி, சிங்கம் |
| பூ | குறிஞ்சி, காந்தள் | மரம் | அகில், வேங்கை |
| பறவை | கிளி, மயில் | ஊர் | சிறுகுடி |
| நீர் | அருவி நீர், சுனைநீர் | பறை | தொண்டகம் |
| யாழ் | குறிஞ்சியாழ் | பண் | குறிஞ்சிப் பண் |
| தொழில் | தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் | | |

**2. ஐவகைத் திணைகளுக்கும் உரிய உணவுகளை விளக்குக.**

| | திணை | உணவு |
|---|---|---|
| (i) | குறிஞ்சி | மலைநெல், தினை |
| (ii) | முல்லை | வரகு, சாமை |
| (iii) | மருதம் | செந்நெல், வெண்ணெல் |
| (iv) | நெய்தல் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் |
| (v) | பாலை | சூறையாடலால் வரும் பொருள் |

**3. ஐந்திணைக்கும் உரிய பெரும்பொழுது மற்றும் சிறு பொழுதுகளை எழுதுக.**

ஒவ்வொரு நிலத்திற்கும் பெரும் பொழுதும் சிறுபொழுதும் ஒன்றுபோல் வாரா.

| | திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|---|
| (i) | குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| (ii) | முல்லை | கார்காலம் | மாலை |
| (iii) | மருதம் | ஆறு பெரும் பொழுதுகள் | வைகறை |
| (iv) | நெய்தல் | ஆறு பெரும் பொழுதுகள் | எற்பாடு |
| (v) | பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

**4. ஐவகை நிலத்திற்குரிய நீர், பறை அட்டவணைப் படுத்துக.**

| | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| நீர் | அருவிநீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற் கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறு கோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன்கோட்பறை, | துடி |

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

**1. கருப்பொருளுக்கேற்ற உரிப்பொருளைப் பொருத்துக.** பிடிஏ–4

அ) குறிஞ்சி - 1. உப்பு விளைவித்தல்　　ஆ) முல்லை - 2. நெல்லரிதல்
இ) மருதம் - 3. நிரைமேய்த்தல்　　ஈ) நெய்தல் - 4. தேனெடுத்தல்

அ) அ - 4, ஆ - 3, இ - 2, ஈ - 1　　ஆ) அ - 3, ஆ - 2, இ - 4, ஈ - 1
இ) அ - 1, ஆ - 3, இ - 2, ஈ - 4　　ஈ) அ - 4, ஆ - 1, இ - 2, ஈ - 3

**விடை** அ) அ - 4, ஆ - 3, இ - 2, ஈ - 1



orders@surabooks.com　PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



2. **வரகு, சாமை ஆகிய உணவுப் பொருள்கள் எவ்வகைத் திணைக்குரியவை?** அரையாண்டுத் தேர்வு 2019

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல் **விடை ஆ) முல்லை**

3. **பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தேர்க.** செப்.–2020

தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை ஈக்வலாக வையுங்கள்.

அ) தங்க பிஸ்கட்டுகளைச் சரியாக ஆ) தங்கக் கட்டிகளை ஈக்வலாக
இ) தங்கக் கட்டிகளை ஈடாக ஈ) தங்கக் கட்டிகளை முறையாக

**விடை இ) தங்கக் கட்டிகளை ஈடாக**

இரண்டாம் தி.தேர்வு 2022

4. **மருத நிலப்பகுதிக்கு அழகு சேர்ப்பன :**

அ) புல்வெளிகள் ஆ) விலங்கினங்கள்
இ) நீர் நிலைகள் ஈ) மரம் செடிகள் **விடை இ) நீர் நிலைகள்**

இரண்டாம் தி.தேர்வு 2022

5. **இளவேனிற் காலம் என்பது :**

அ) சித்திரை, வைகாசி ஆ) ஆனி, ஆடி
இ) ஆவணி, புரட்டாசி ஈ) ஐப்பசி, கார்த்திகை **விடை அ) சித்திரை, வைகாசி**

## கற்பவை கற்றபின்

1. **பண்டைத் தமிழரின் திணைநிலை வாழ்க்கை முறையையும் இன்றைய தமிழரின் வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு ஒவ்வொருவர் கருத்தையும் பதிவு செய்து பொதுக் கருத்தை அறிக.**

**பண்டைத் தமிழரின் திணைநிலை வாழ்க்கை முறை :**

பழங்காலத்தில் மனிதன் காடு, மலை, வயல், கடல், மணல் போன்ற இடங்களில் வாழ்ந்து வந்தான். அந்தந்த நிலத்திற்கேற்ற தொழிலைச் செய்தான். அவையே அவனுடைய வாழ்க்கையாக மாறியது. மனிதன் கல்வியறிவு இல்லாமல் நாகரிகமற்ற வாழ்வு வாழ்ந்து வந்தான்.

தமிழர்கள் நில அமைப்பை ஐந்தாகப் பிரித்து பயன்படுத்தினர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகும். ஐந்து நிலத்திற்கும் எனத் தனித்தனியான முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் கொண்டு வாழ்ந்து வந்தனர்.

**தேவி** : குறிஞ்சித் திணை மக்கள், மலையும் மலையைச் சார்ந்த இடத்தில் வசித்தனர். இங்கு வாழ்ந்த மக்கள் குறவர், குறத்தியர் என்று அழைக்கப்பட்டனர். தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் ஆகிய தொழில்களை செய்தனர்.

**கண்ணன்** : முல்லைத் திணை மக்கள் வாழ்ந்த இடம் காடும் காடு சார்ந்த பகுதியும் ஆகும். தற்போது காடுகள் பெரும்பாலும் அழிக்கப்பட்டு நகரங்கள் பெருகிவிட்டன. முயல், மானினங்கள் குறைந்துவிட்டன. ஏறுதழுவுதல், நிரை மேய்த்தல் இவ்விரண்டும் முல்லை நிலத்தில் வாழ்கின்ற ஆயர்களால் நிகழ்த்தப்படுகிறது.

**சந்தியா** : மருதத் திணை மக்கள் வாழ்ந்த இடம் வயலும் வயல் சார்ந்த இடமும் ஆகும். தற்போது வயல்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. விளை நிலங்கள், விலை நிலங்களாக ஆக்கப்படுகின்றன. உழவுத்தொழில் அரிதாகிவிட்டது. இயற்கை மாற்றங்களால் நீர் பற்றாக்குறை, மழை பெய்யாதது எனப் பல காரணங்களால் மருத நில வாழ்க்கை முறை மாறிவிட்டது.

**ஜெயஸ்ரீ** : நெய்தல் திணை மக்கள் வாழ்ந்த இடம் கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகும். இங்கு வாழ்ந்த மக்கள் பரதர், பரத்தியர். தற்காலத்திலும் இவர்கள் மீன்பிடித் தொழிலையே செய்கின்றனர்.

**ஒவியா** : பாலைத் திணை மக்கள் வாழ்ந்த இடம் சுரமும் சுரம் சார்ந்த இடமும் ஆகும். தற்போது பாலை நிலம் என்று தமிழகத்தில் இல்லை. குறிஞ்சியும் முல்லையும் கோடையில் தன் இயல்பு நிலை மாறும்.

இந்த ஐந்து திணைகளிலும் பண்ட மாற்றுமுறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

**இன்றைய வாழ்க்கைமுறை :**

இன்றைய வாழ்க்கைமுறையில் மனிதன் உழைக்காமல் உண்ண வேண்டும் என நினைக்கிறான். உடல் உழைப்பில்லாமல் உடலில் வியர்வை இல்லாமல் உட்கார்ந்த இடத்திலேயே எல்லாம் வரவேண்டும் என நினைக்கிறான். நான்தான் பெரியவன் என்று ஆணவமாக இருக்கிறான். மனித உயிர்க்கு மதிப்பில்லாமல் பணத்திற்காக எதையும் செய்கிறான். தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற நினைப்போடு வாழ்கிறான். மற்ற உயிர்களை மதிப்பதில்லை. பெரியவர்களையும் மதிப்பதில்லை. தான், தன்னுடைய குடும்பம் என்று மட்டுமே வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய வாழ்க்கை முறையானது பணத்திற்காகவே வாழும் வாழ்க்கையாக தோற்றமளிக்கிறது.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**பொதுக்கருத்து :**

பண்டையத் தமிழரின் திணைநிலை வாழ்க்கை முறையில் பண்டமாற்றுமுறை பின்பற்றப்பட்டது. ஒழுக்கத்துடனும், பாசத்துடனும் வாழ்ந்து வந்தார்கள். உயிர்களின் மீது மதிப்பு இருந்தது. இன்று உயிர்களின் மீது மதிப்பில்லை. பணத்தின் மீது மட்டுமே மதிப்பு வைத்திருக்கிறார்கள். இன்று அனைவரும் பாசத்திற்காக ஏங்குகிறார்கள் என்பதே உண்மையான கருத்தாகும்.

## மொழியை ஆள்வோம்

### மொழிபெயர்க்க

இரண்டாம் தி.தேர்வு & ஆகஸ்ட்–2022

***KOOTHU***

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

**விடை : கூத்து**

கிராமிய கலைஞர்களால் தெருவில் இசை நாடகம் போல் நடத்தப்படுவதே தெருக்கூத்து. இதில் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் இன்னபிற பழங்கால புராணங்களிலிருந்தும் கதைகளை, நிறைய பாடல்களுடன் நாடகமாக்கம் செய்து, சூழ்நிலைக்கேற்ப வசனங்களை சேர்த்து கலைஞர்கள் மெருகேற்றி நடிப்பார்கள். பதினைந்திலிருந்து இருபது கலைஞர்கள் ஒரு குழுவாக 'கூத்து குழு' ஒன்றை அமைத்து இதை நடத்துவார்கள். குழுவுக்கென ஒரு பாடகர் இருந்தாலும், அனைவருமே தங்கள் குரலில் பாடுவார்கள். இதில் பங்கேற்கும் கலைஞர்கள் மிக கனமான உடைகளும், ஆபரணங்களும் அணிந்து கனமாக முகப்பூச்சும் அணிந்து இதில் பங்கு கொள்வார்கள். இந்த கூத்துக் கிராமப்புறங்களில் மிகவும் பிரபலமாகும்.

### தொடர்களை அறிவோம், தொடர்ந்து செய்வோம்

ஒரு தனிச்சொற்றொடரில் ஓர் எழுவாயோ பல எழுவாய்களோ இருந்து ஒரு பயனிலையைக் கொண்டு அமையும்.

**எ.கா.**

அ) மேரி பேருந்திற்காகக் காத்திருந்தார்.

ஆ) மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்.

தொடர்சொற்றொடர், ஒன்றுக்கும் மேற்பட்ட பயனிலைகளைக் கொண்டிருக்கும்.

**எ.கா.**

அ) இனியநிலா பேச்சுப்போட்டியில் பங்கேற்றார்; வெற்றி பெற்றார்; பரிசைத் தட்டிச் சென்றார்.

ஆ) அன்வர் அரங்கத்திற்கு வந்து, நாடகம் பார்த்து, மகிழ்ச்சி அடைந்தார்

கலவைச் சொற்றொடரில் கருத்து முழுமை பெற்ற ஒரு முதன்மைத் தொடரும் கருத்து முழுமை பெறாத துணைத் தொடர்களும் கலந்து வரும்.

**எ.கா.**

அ) மழை கொட்டிக் கொண்டிருந்தாலும் பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான்.

பகலவன் பள்ளிக்கு நடந்துவந்தான் – முதன்மைத்தொடர்

மழை கொட்டிக் கொண்டிருந்தாலும் – துணைத் தொடர்

### தொடர்களை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக

**எ.கா.**

பிடிஏ–5; அரையாண்டுத் தேர்வு 2019

அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.

(தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)

அழைப்புமணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.

1. **இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்ககங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார். (தொடர் சொற்றொடராக மாற்றுக)**

இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்ககங்களில் அடுக்கி வைத்து கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



## அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(4 × 1 = 4)**

1. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
   அ) வெளிநாட்டு முதலீடுகள் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்

2. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ............., ............. வேண்டினார்.
   அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக
   இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

3. "இவள் தலையில் எழுதியதோ
   கற்காலம்தான் எப்போதும்..." – இவ்வடிகளில் கற்காலம் என்பது
   அ) தலைவிதி ஆ) பழைய காலம்
   இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

4. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி
   அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்
   இ) உருவகம் ஈ) தீவகம்

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** **(2 × 2 = 4)**

5. 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர்ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?
6. தூய துறவி பற்றி எழுதுக.
7. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?
8. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு – இத்தொடரை இரு தொடர்களாக்குக.

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளிக்க.** **(2 × 3 = 6)**

9. சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
10. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.
11. ஜெயகாந்தனின் சிறப்பு அடையாளங்களாக சா. செல்லப்பன் கூறியவற்றை எழுதுக.

**IV. அடிபிறழாமல் எழுதுக.** **(1 × 3 = 3)**

12. 'நவமணி' – என தொடங்கும் தேம்பாவணி பாடலை அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.

**V. விடையளி (ஏதேனும் ஒன்று)** **(1 × 8 = 8)**

13. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

14. அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

☆ ☆ ☆



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores

# மொழித்திறன் பயிற்சிகள்

## வாக்கியப் பிழைகளைத் திருத்துக

1. **செய்திகளை வாசிப்பது மணவாளன்.**
   செய்திகளை வாசிப்பவர் மணவாளன்.
2. **அவள் குருடி அல்ல.**
   அவள் குருடி அல்லள்.
3. **அவை மரங்கள் அன்று.**
   அவை மரங்கள் அல்ல.
4. **மக்கள் வாழ்கிறார்.**
   மக்கள் வாழ்கின்றனர்.
5. **மலர்விழி பால் சாப்பிட்டாள்.**
   மலர்விழி பால் அருந்தினாள்.
6. **தென்றல் மெல்ல வீசின.**
   தென்றல் மெல்ல வீசியது.
7. **நளவெண்பாவை எழுதியவர் புகழேந்தி ஆகும்.**
   நளவெண்பாவை எழுதியவர் புகழேந்தி ஆவார்.
8. **ஓவியம் வரைந்தது கந்தன்.**
   ஓவியம் வரைந்தவன் கந்தன்.
9. **நிள்! கவநி! புரப்படு!**
   நில்! கவனி! புறப்படு!
10. **அரம் செய விறும்பு.**
    அறம் செய விரும்பு.

## மரபுப் பிழையை நீக்கி எழுதுதல்

### I. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

1. **மாந்தோட்டத்தில் குயில் பேசியது.**
   மாந்தோப்பில் குயில் **கூவியது.**
2. **கோழி கத்த, மயில் கூவியது.**
   கோழி **கொக்கரிக்க,** மயில் **அகவியது.**
3. **எருது கீச்சிட எலி எக்காளமிட்டது.**
   எருது **எக்காளமிட** எலி **கீச்சிட்டது.**
4. **கவிஞர் செய்யுள் எழுதினார்.**
   கவிஞர் செய்யுள் **இயற்றினார்.**
5. **பனை இலையால் கூரை வேய்ந்தான்.**
   **பனையோலையால்** கூரை வேய்ந்தான்.
6. **கரும்புக் காட்டில் யானைக் கூட்டம் நின்றது.**
   **கரும்புத்தோப்பில்** யானைக் கூட்டம் நின்றது.
7. **கிடாரி கன்று போட்டது.**
   கிடாரி கன்று **ஈன்றது.**
8. **கோழிக்குட்டி, பசுங்குட்டி, கீரிக்குட்டி.**
   கோழிக்**குஞ்சு**, பசுங்**கன்று**, கீரிப்**பிள்ளை.**
9. **சிங்கக் குட்டி அழகாக உள்ளது.**
   சிங்கக் **குருளை** அழகாக உள்ளது.

### II. கீழுள்ள மரபுத் தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க :

1. **வாழையடி வாழையாய் : (பரம்பரையாய்)**
   தமிழர்களிடம் விருந்தோம்பல் பண்பு, **வாழையடி வாழையாய்** வளர்ந்து வருகிறது.
2. **அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு : (பெண்களுக்கு கல்வி அவசியமில்லை)**
   **அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு** என்னும் மூடப்பழக்கம் இன்று மலையேறிவிட்டது.
3. **கயிறு திரித்தல் : (இல்லாததைச் சொல்கிறான்)** பிடிஏ–4
   வானத்திலிருந்து ஒளிப்பிழம்பாய்த் தட்டு வடிவில் ஒன்று இறங்கியதாக ஒருவன் கயிறு திரித்தான்.
4. **கண்துடைப்பு : (போலியாகச் செயல்படுதல்)**
   பெற்றோர் கண்டிப்பார்களே என்று **கண்துடைப்பாகப்** படிக்கின்ற மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற இயலாது.
5. **கை ஓங்கியது : (மேன்மைப்பட்டது)**
   பாகிஸ்தானோடு நடைபெற்ற கிரிக்கெட்டு போட்டியில் இந்திய அணியின் **கை ஓங்கிய** போது, இந்திய மக்களிடையே எழுந்த மகிழ்ச்சிக்கும் பேராரவாரத்திற்கும் அளவே இல்லை.

### III. உவமைத்தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க.

1. **இலவு காத்த கிளி போல :** **இலவு காத்த கிளி போல** தண்ணீருக்காகக் குடங்களுடன் மக்கள் காத்து நின்றனர்.
2. **காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல :** தமிழர்கள் தமிழ்மொழியை மறந்து பிறமொழிகளைப் பேசுவதைக் கேட்கும் போது **காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல** இருக்கிறது.
3. **அடியற்ற மரம் போல :** தந்தை இறந்த துயரச் செய்தியைக் கேட்டதும் மகன் **அடியற்ற மரம் போல** வீழ்ந்தான்.
4. **மடைதிறந்த வெள்ளம் போல :** அறிஞர் அண்ணா அவர்கள் **மடை திறந்த வெள்ளம் போல** பேசும் ஆற்றலுடையவர்.
5. **கல்மேல் எழுத்துப்போல :** இராஜராஜ சோழனின் வீரதீரச் செயல்கள் **கல்மேல் எழுத்துப் போல** மனத்தில் அழுத்தமாகப் பதிந்தது.

## தொடரை மாற்றி அமைக்க

1. **பூம்புகார்ச் சிற்பங்கள் மிகவும் அழகாய் உள்ளன. – செய்தி வாக்கியத்தை வினா வாக்கியமாக மாற்றுக.**
   பூம்புகார்ச் சிற்பங்கள் மிகவும் அழகாய் உள்ளனவா?



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



2. **'அறம் செய்' – கட்டளை வாக்கியத்தைச் செய்திவாக்கியமாக மாற்றுக.**
அறம் செய்ய வேண்டும்.

3. **முயன்றால் முடியாததும் உண்டோ? – இவ்வினா வாக்கியத்தைச் செய்தி வாக்கியமாக மாற்றுக.**
முயன்றால் முடியாதது இல்லை.

4. **முயற்சி செய்ய வேண்டும் – கட்டளை வாக்கியமாக மாற்றுக.**
முயற்சி செய்.

5. **வள்ளுவரை அனைவரும் அறிவர் – வினா வாக்கியமாக மாற்றுக.**
வள்ளுவரை அனைவரும் அறிவரோ?

## உவமை, உருவக மாற்றங்கள்

**கீழ்க்காணும் உவமைகளை உருவகங்களாய் மாற்றுக.**

| உவமை | உருவகம் | உவமை | உருவகம் | உவமை | உருவகம் |
|---|---|---|---|---|---|
| அமுதமொழி | மொழியமுது | கயல்விழி | விழிகயல் | கல்மனம் | மனக்கல் |
| தேன்தமிழ் | தமிழ்த்தேன் | பூவிரல் | விரல் பூ | பால்நிலவு | நிலவுப் பால் |
| மதிமுகம் | முகமதி | மலரடி | அடிமலர் | தாமரைக்கண் | கண்தாமரை |
| முத்துப்பல் | பல்முத்து | விற்புருவம் | புருவவில் | குரங்குமனம் | மனக்குரங்கு |
| மலர்ப்பாதம் | பாதமலர் | மலர்க்கை | கைமலர் | மலைச்செல்வம் | செல்வமலை |
| அமுதூற்று | ஊற்றமுது | தேன்மொழி | மொழித்தேன் | குமுதவாய் | வாய்குமுதம் |
| கனிஇதழ் | இதழ்கனி | பொன்மலர் | மலர்ப்பொன் | தாமரைமுகம் | முகத்தாமரை |
| வேல்விழி | விழிவேல் | கடல்நூல் | நூற்கடல் | கனிவாய் | வாய்க்கனி |

## இலக்கிய நயம் பாராட்டல்

**எதுகை** : செய்யுளின் அடுத்தடுத்த அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.
**மோனை** : செய்யுளின் அடுத்தடுத்த அடிகளில் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.
**முரண்தொடை** : முரண்பாடான கருத்துகள் வந்தால் அது முரண்தொடையாகும்.
**இயைபு நயம்** : செய்யுளின் அடுத்தடுத்த அடிகளில் இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு நயமாகும்.

1. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்.
– பாரதியார்

**திரண்ட கருத்து :** பிற நாடுகளைச் சேர்ந்த சிறந்த அறிஞர்களின் படைப்பை தமிழ்மொழியில் மொழிபெயர்க்க வேண்டும். என்றும் அழியாத புகழுடைய நூல்கள் பலவற்றைத் தமிழில் புதிதாக இயற்ற வேண்டும். நமக்கு நாமே நம்முடைய பழைய புராணங்களைப் பேசிக் காலத்தை வீணே கழிப்பதில் எந்தப் பெருமையும் கிடையாது.திறமான நம்முடைய படைப்புகளை, படித்து அதற்கு வெளிநாட்டார் மரியாதை செய்ய வேண்டும்.

**எதுகை** : பிறநாட்டு, இறவாத, திறமான **மோனை** : இறவாத, இயற்றல், மறைவாக, மகிமை
**இயைபு** : வேண்டும், வேண்டும்.

2. "நாடும் மொழியும் நமதிரு கண்கள்
நாம் தினம் போற்றி வணங்கிடுவோம்;
கூடும் அன்பினில் வேற்றுமை மறந்தே
குலவிடுவோமே இந்தியர் என்றே
தேடிய சுதந்திரப் பயிரின் வேலி
தூயநல் ஒருமைப்பாடே யாகும்
ஓடிடும் வேற்றுமை நோயே உரிய
ஒருமைப் பாடெனும் மாமருந்தாலே."
– பாரதியார்



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**திரண்ட கருத்து :** நமது தாய்நாட்டையும் தாய்மொழியையும் நமதிரு கண்களாகப் பாவித்து வணங்க வேண்டும். 'இந்தியர்' என்ற பெருமையுடன் வேற்றுமைகளை மறந்து அன்புடன் வாழ்வோம். அரும்பாடுபட்டு நாம் அடைந்த சுதந்திரம் என்ற பயிரினை அந்நியர்களிடமிருந்து காக்கும் வேலி நம் ஒருமைப்பாடேயாகும். ஒருமைப்பாடு என்னும் மாமருந்தினால் வேற்றுமை என்ற நோயை விரட்டிடுவோம்.

**எதுகை** : நாடும், கூடும்; தேடிய, ஓடிடும்

**மோனை** : நாடும், நாம்

**முரண்தொடை** : வேற்றுமை × ஒருமைப்பாடு; நோய் × மாமருந்து.

3. பாலைவனம் சோலைவனமாக வேண்டும்;
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்;
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்;
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்;
சீலைஉடை கதருடையாய்த் திகழ வேண்டும்;
தேசபக்தி செழுந்தோங்கி வளர வேண்டும்;
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்;
வெற்றியின்மேல் வெற்றி எமக்கெய்த வேண்டும்;

– கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

**திரண்ட கருத்து:** பாலைவனம், சோலைவனமாக மாறவேண்டும். அச்சோலை வனத்திலே பசுங்கிளிகள் கொஞ்சிப் பாடவேண்டும். நாம் செல்லும் சாலைகளில் எல்லாம் பலவகையான தொழிற்சாலைகள் பெருக வேண்டும். கற்றறிந்தோர் சபைகளிலே தம் வாதத்திறமையை எடுத்தியம்ப வேண்டும். சீலை உடைகளை தவிர்த்து கதர் உடைகளாக இருக்க வேண்டும். நாம் நாட்டின் வேலையில்லா திண்டாட்டம் நீங்க வேண்டும். நம் நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னேறி எல்லையில்லாப் புகழை அடைய வேண்டும். அப்படிப்பட்ட புகழ் வெற்றி மேன்மேலும் குவிய வேண்டும் என தன் கனவை வளரும் சமுதாயத்திற்கு எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர்.

**மையக் கருத்து:** நம் நாடு எல்லா வளமும் பெற வேண்டும் மக்களுக்கு தேசபக்தி வளர வேண்டும் என்பதே இப்பாடலின் மையக்கருத்தாகும்.

**எதுகை** : பாலைவனம், சோலைவனமாக, சாலைகளிற், வேலையில்லா, சீலை உடை.

**மோனை** : பாலைவனம், பசுங்கிளிகள், சாலைகளில், சபைகளிலே, வேலையில்லா, வெற்றியின்

**இயைபு** : வேண்டும் வேண்டும் என்னும் இயைபுச் சொற்கள் வந்து ஓசையின்பம் பயக்கின்றன.

**சந்தச் சுவை** : இப்பாடலில் எதுகை, மோனை, இயைபு ஆகியவை பயின்று வந்துள்ளதால் இனிய சந்தம் நம் செவிகளுக்குத் தேனாக இப்பாடல் அமைந்துள்ளது.

## கடிதம் எழுதுதல்

1. **தடகள விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.**

சென்னை,
16-03-20XX

பாசமுள்ள நண்பன் மணிமாறனுக்கு,

இங்கு நான், என் பெற்றோருடன் நலமாக இருக்கிறேன். அங்கு நீயும், பெற்றோரும் நலமுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

நேற்று வெளி வந்த பத்திரிக்கைகள் மூலமாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் உன் இமாலய வெற்றியை அறிந்து பெருமிதம் அடைந்தேன். இந்த ஆண்டு நடந்த மாநில அளவிலான தடகளப் போட்டியில் முதல் இடம் பெற்று உன் இலட்சியத்தை நீ தொட்டுவிட்டாய். வரும் ஆண்டு முதல் உன்னுடைய பயிற்சிக்காக ஆகும் செலவை தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளதைக் குறித்து ஆனந்தமடைந்தேன்.

நீ இப்பொழுது பெற்றுள்ள வெற்றி மேலும் மேலும் பல சிகரங்களைத் தொட வேண்டும் என்பது என்னுடைய விருப்பம் மட்டுமல்ல; தமிழ்நாட்டு மக்களின் விருப்பமும் அதுதான். வெற்றி விழாவன்று நீ தங்கப்பதக்கம் வாங்கப் போவதைக் காண நான் என் பெற்றோருடன் நேரில் வந்து வாழ்த்துகிறேன்.

வாழ்க! வளர்க!

உன் அன்பு நண்பன்,
செ. முரளி
(செ. முரளி)

**உறைமேல் முகவரி**

**பெறுநர் :**
அ.மணிமாறன்,
எண். 10, தெற்கு வெளிவீதி,
மதுரை - 625 001.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



**2. காணாமல் போன மகிழுந்தினைக் கண்டுபிடித்துத் தருமாறு காவல் ஆணையருக்குப் புகார்க் கடிதம் ஒன்று எழுதுக.**

**அனுப்புநர் :** 30.06.20XX

செ. கோபாலன்,
30, தியாகராஜர் தெரு, சென்னை - 600 003.

**பெறுநர் :**

உயர்திரு ஆணையர் அவர்கள்,
காவல்துறை, சென்னை - 600 003.

**பொருள் :** காணாமல் போன மகிழுந்தினைக் கண்டுபிடித்துத் தருதல் தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம்.

என்னுடைய வீட்டின் முன் உள்ள வெற்றிடத்தில் என் மகிழுந்தினை நேற்று இரவு நிறுத்தி வைத்திருந்தேன். இரவு பன்னிரண்டு மணிக்கு நான் உறங்குவதற்காகச் சென்றபோது கூட மகிழுந்து இருந்தது. ஆனால் காலையில் எழுந்து பார்த்தபோது மகிழுந்தினைக் காணவில்லை. எவரோ திருடிச் சென்றுள்ளனர்.
என்னுடைய மகிழுந்தினை கண்டுபிடித்து தருமாறு வேண்டுகிறேன்.

**மகிழுந்தின் விவரங்கள் :**

| | |
|---|---|
| பெயர் | : ஷிப்ட் |
| எண் | : TN -10 - 1905 |
| வண்ணம் | : நீலம் |
| வாங்கிய ஆண்டு | : 2015 |

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
*செ. கோபாலன்*
**(செ. கோபாலன்)**

**உறைமேல் முகவரி**

பெறுநர்
உயர்திரு ஆணையர் அவர்கள்,
காவல்துறை,
சென்னை - 600 003.

**3. உங்கள் ஊரில் சாலை / மின்விளக்கு வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்கு கடிதம் எழுதுக.**

**அனுப்புநர்:** 30-11-20XX,
வெள்ளானூர்.

ஊர்ப்பொதுமக்கள்,
வெள்ளானூர், ஆவடி, சென்னை - 54.

**பெறுநர்:**

உயர்திரு நகராட்சி ஆணையர் அவர்கள்,
ஆவடி நகராட்சி அலுவலகம், ஆவடி- 54.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** சாலை/மின் விளக்கு வசதி வேண்டுதல் சார்பாக.

வணக்கம். நாங்கள் வசிக்கும் வெள்ளானூர் பகுதியானது ஆவடி நகரிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு ஏறத்தாழ முந்நூறு வீடுகள் உள்ளன. எங்கள் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சாலைகள் குண்டும் குழியுமாய், சேறும் சகதியுமாய் மிக மோசமான நிலையில் பழுதடைந்து உள்ளன. இதனால் அடிக்கடி விபத்துக்கள் நடைபெறுகின்றன. இதனால் பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்களும், மருத்துவமனைகளுக்கு செல்லும் நோயாளிகளும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் தெருவிளக்குகள் சரிவர எரியாததால் முதியோர்கள், பெரியவர்கள், குழந்தைகள் தெருக்களில் நடக்க முடியாமல் அவதிப்படுகின்றனர். இருட்டைப் பயன்படுத்தி வழிப்பறி கொள்ளைகளும் திருட்டு நிகழ்வுகளும் அதிகரித்து வருகின்றன.

எனவே பழுதுபட்ட சாலைகளைச் சீர்ப்படுத்தியும், போதிய மின்கம்பங்களையும், மின் விளக்குகளைப் பொருத்தியும் மக்களின் இடையூறுகளை போக்கி அடிப்படைத் தேவையை நிறைவேற்றி தரும்படி எம்பகுதி மக்கள் சார்பாக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



வேண்டியவற்றை வாங்கி வைத்துக்கொள்ளுங்கள். வெளியில் செல்லும்போது முகக்கவசம் கட்டாயம் அணிந்து செல்லுங்கள். அடிக்கடி கிருமிநாசினி பயன்படுத்துங்கள்.

கபசுரக்குடிநீர் அருந்துங்கள். சத்தான உணவுகளை உண்ணுங்கள். புரதச்சத்து மிகுந்த உணவுகளை உண்ணுங்கள். பழங்கள் நிறைய சாப்பிடுங்கள். கொரனோ பெருந்தொற்று நம்மை அணுகாமல் பார்த்துக் கொள்வது நம் கையில்தான் உள்ளது.

இங்கு எங்களுக்கு இணையவழியில்தான் பாடம் கற்பிக்கப்படுகிறது. எனக்குப் பள்ளி எப்போது திறப்பார்கள் என்று ஆவலாய் இருக்கிறது. நிலைமை சரியானதும் நாங்கள் அனைவரும் அங்கு வருகிறோம். உடனே பதில் கடிதம் எழுதுங்கள்.

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள
அஅஅஅ

**உறைமேல் முகவரி**

திரு.சிவா
எண்.30, பிள்ளையார் கோவில் தெரு,
வெட்டுவானம், கண்ணகி நகர், வேலூர்.

## பொதுக் கட்டுரைகள்

**1. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிடுக.**

**குறிப்புகள் : முன்னுரை - தமிழர் பண்பாட்டில் விருந்து - தமிழர் உணவுமுறை - விருந்தோம்பல் தமிழர் பண்பாட்டின் மகுடம் - முடிவுரை.**

### தமிழரின் விருந்து போற்றும் நெறி

**முன்னுரை :** விருந்தினரை உளமார வரவேற்று விருந்தளிக்கும் தமிழரின் முறை குறித்து சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. விருந்தோம்பல் என்பது அவர்கள் பசியைத் தீர்ப்பது மட்டுமல்ல; அவர்கள் மனம் கோணாமல் நடந்து கொள்ளும் முறையையும் உள்ளடக்கியதாகும். அத்தகைய தமிழரின் நெறி பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழர் பண்பாட்டில் விருந்து :**

'விருந்தோம்பல்' என்று ஓர் அதிகாரத்தையே திருவள்ளுவர் படைத்து விருந்தோம்பலின் முக்கியத்துவத்தைக் கூறியுள்ளார்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு." என்ற குறளின் வாயிலாக இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார். முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை "மோப்பக் குழையும் அனிச்சம்" என்ற குறளின் மூலம் எடுத்துரைக்கிறார்.

**தமிழர் உணவு முறை :**

ஔவையார் எழுதிய "வரகரசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்" என்று தொடங்கும் தனிப்பாடலில், புள்வேளூர் பூதன் என்பவர் தனக்கு அளித்த வரகரிசிச் சோறு, கத்தரிக்காய் வதக்கல், அளவாகப் புளித்த மோர் ஆகியவற்றுக்கு ஈடாக இந்த உலகையே தரலாம் என்று கூறியுள்ளார். தமிழர் பண்பாட்டில் வாழையிலைக்குத் தனித்த இடம் உள்ளது. தலைவாழை இலையில் விருந்தினர்க்கு உணவளிப்பது தமிழரின் மரபாகக் கருதப்படுகிறது. வாழையிலையில் உள்ள மருத்துவப் பயன்களை தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

உண்பவரின் இடப்பக்கம் வாழையிலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும். இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான, அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான, அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து பரிமாறுவார்கள். உண்பவர் மனமறிந்து, அவர்கள் விரும்பி உண்ணும் உணவு வகைகளைப் பரிமாறுவர்.

அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் ஆண்டுதோறும் 'வாழையிலை விருந்து விழா'வைக் கொண்டாடி வருகிறது. தமிழரின் பாரம்பரிய உணவு வகைகளான முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய் கூட்டு, தினைப் பாயாசம், அப்பளம் எனச் சுவையாக அங்கு வாழும் தமிழர்கள் விருந்தளிக்கின்றனர்.

**விருந்தோம்பல் பண்பாட்டின் மகுடம் :**

விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை வியந்து உரைத்தல், நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல், முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல், "வீட்டிற்குள் வருக" என்று வரவேற்றல், அவர் எதிரில் நின்று மனம் மகிழும்படியாகப் பேசுதல், அவர் அருகிலேயே அமர்ந்து கொள்ளுதல், அவர் விடைபெற்றுச் செல்லும்போது வாயில் வரை பின்தொடர்ந்து செல்லுதல், அவரிடம் மகிழ்ச்சியாக முகமன்கூறி வழியனுப்புதல் ஆகிய ஒன்பதும் தமிழரின் விருந்தோம்பல் பண்பின் மணிமகுடங்களாகும்.

பண்டைத் தமிழர் விருந்தினர் விடைபெறும்போது அவர்கள் செல்லவிருக்கின்ற தெருவரை ஏழு அடிகள் நடந்து சென்று வழியனுப்பினர் என்று **பொருநராற்றுப்படை** கூறுகிறது. பரிசில் பெறச் செல்லும் கூத்தர்கள், நன்னன் ஆட்சி செய்யும் பகுதியிலுள்ள வீடுகளுக்குள் உரிமையுடன் உறவினர் போலவே சென்றதையும், அந்த வீட்டிலிருந்தோர் இனிய சொற்கள் பேசி, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாக அளித்தனர் என்று **மலைபடுகடாம்** கூறுகிறது.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**முடிவுரை :**

உலகிற்கு நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்த இனம் தமிழினம். தமிழினத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் தலையாயது விருந்தோம்பல். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற வாக்கிற்கு இணங்க அற நெறியுடன் வாழ்ந்த பண்டைய தமிழரின் பண்பாட்டை இன்றைய தமிழர்களாகிய நாமும் பின்பற்ற வேண்டும்.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

1. **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக. முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் – நாட்டுப் பற்று – மொழிப்பற்று – பொதுவாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.** பிடிஏ–1; மே– 2022

**முன்னுரை :**

இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட எண்ணற்ற பாரத மைந்தர்களுள் வ.உ.சிதம்பரனார் மிக முக்கியமான ஆளுமை ஆவார். அவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழகம் தந்த தவப்புதல்வர் :**

எட்டையபுரத்துக்கு அருகிலுள்ள ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் உலகநாத பிள்ளைக்கும் பரமாயி அம்மையாருக்கும் 1872ஆம் ஆண்டு மகனாகத் தோன்றினார். தன் கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் எழுத்தராகப் பணியாற்றினார். பின்னர் திருச்சி சென்று சட்டம் பயின்று வழக்கறிஞரானார்.

**நாட்டுப்பற்று :**

நாட்டில் சுதந்திரப் போர் தீவிரமடைந்து கொண்டிருந்த காலகட்டத்தில் அவர் தன்னுடைய வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு நாட்டு விடுதலைக்காகப் பணியாற்ற, தன்னை விடுதலை இயக்கத்தில் இணைத்துக் கொண்டார். பாலகங்காதர திலகரின் வழியில் சென்ற வ.உ.சி அவர்கள் தமிழகத்தில் விடுதலைப் போரைத் தீவிரப்படுத்தினார். சுப்பிரமணிய சிவா, பாரதியார், வாஞ்சிநாதன் போன்றோர் வ.உ.சியின் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்தனர். தன் பேச்சுக்களாலும் எழுத்துகளாலும் மக்கள் மனதில் விடுதலை உணர்வைத் தூண்டினார். சுதேசி இயக்கத்தை வளர்த்து அந்நியப் பொருள்கள் மற்றும் துணிகளை எரித்தார். உள்நாட்டுப் பொருள்களை வாங்குமாறு மக்களை ஊக்கப்படுத்தினார்.

ஆங்கிலேயரின் கடல் வாணிபத்தை அழிக்க வேண்டும் என்று எண்ணிய வ.உ.சி அவர்கள் கடும் முயற்சிகளைத் தாண்டி இரண்டு கப்பல்களை வாங்கி கடல் வாணிபத்தைத் தொடங்கினார். அவர் வெற்றியைப் பொறுக்காத ஆங்கிலேய அரசு அவர்மீது வீண் பழி சுமத்தி இரட்டை ஆயுள் தண்டனை வழங்கியது. சிறையில் கசையடி பெற்றார்; கல்லுடைத்தார்; செக்கிழுத்தார். நம்மை சுதந்திர இந்தியாவில் வாழவைப்பதற்கு அவர் எண்ணற்ற துன்பங்களை அடைந்தார்.

**மொழிப்பற்று :**

தாய்நாட்டை எந்த அளவு நேசித்தாரோ அந்த அளவு தாய்மொழியான தமிழையும் நேசித்தார். மெய்யறம், மெய்யறிவு, பாடல் திரட்டு, சுயசரிதை ஆகிய நான்கு நூல்களை இயற்றியுள்ளார். இன்னிலை, சிவஞான போதம், திருக்குறள் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். திருக்குறள் (மணக்குடவர் உரையுடன்), தொல்காப்பியம் (இளம்பூரணர் உரையுடன்) ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். விவேக பானு, இந்து நேசன், தி நேஷனல் ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். ஜேம்ஸ் ஆலன் என்பவர் எழுதியுள்ள நான்கு நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

**பொதுவாழ்வில் தூய்மை – எளிமை :**

பொது வாழ்வில் தூய்மையைக் கடைபிடித்தார். வழக்கறிஞராக அவர் இருந்தபோது ஏழை மக்கள் மீது கொண்ட அனுதாபத்தினால் பலமுறை பணம் வாங்காமல் வாதாடி வெற்றி பெற்றுள்ளார். பணத்திற்காக வாதாடாமல் ஏழைகளுக்காகவும் உண்மைக்காகவும் வாதாடினார். அந்நியத் துணிகளை உடுத்துவதற்கு அனுமதிக்கவில்லை.

**மக்கள் பணியே மகத்தான பணி :**

தொழிலாளர் நலனுக்காக உழைத்தார். கோரல் மில் தொழிலாளர்களுக்கு பிரச்சனை ஏற்பட்டபோது, உடனிருந்து உழைத்து அவர்களுக்காகப் பாடுபட்டார். தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார். கல்வியறிவைப் பெற முடியாத மாணவர்களுக்கு உதவி செய்து அவர்கள் கல்வி கற்க உதவி செய்துள்ளார். மக்களுக்கு செய்யும் சேவைகள் மகேசனுக்கு செய்யும் சேவைகள் எனக் கருதினார்.

**முடிவுரை :**

நாட்டிற்காக, நாட்டு மக்களுக்காக உழைத்த வ.உ.சி அவர்கள் இந்நாடு விடுதலையடைந்த போது உயிருடன் இல்லை. 1936ஆம் ஆண்டு நவம்பர் 18 அன்று உயிர் நீத்தார். தமிழகம் தந்த தவப்புதல்வனை எண்ணி பாரதத்தாய் கண்ணீர் வடித்தாள்.

2. **மனித நேயமிக்க ஆளுமை ஒருவருக்கு குறிப்புகளைப் பயன்படுத்தி நினைவிதழ் ஒன்று உருவாக்குக. முன்னுரை – என் இளமைப் பருவம் – விடுதலைப் போராட்டத்தில் நான் – பொது நலமே தன்னலம் – எளிமையே அறம் – நாட்டின் முன்னேற்றமே நோக்கம் – எளியோரின் அன்பே சொத்து – முடிவுரை.** செப்.–2020

**நினைவிதழ் – சுதந்திர போராட்டத் தியாகி சிதம்பரனார்**

**முன்னுரை :**

ஆங்கிலேயரின் அடக்குமுறையால் நமது இந்திய மக்கள் பொங்கி எழுந்தனர். போராடினர். அவர்களில் நானும் ஒருவன் என்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

**என் இளமைப் பருவம் :**

எட்டையப்புரத்துக்கு அருகில் ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் 1872–ஆம் ஆண்டு செப்டம்பர் 5–ஆம் நாள் நான் பிறந்தேன். என் தந்தையாரின் பெயர் உலகநாத பிள்ளை. தாயாரின் பெயர் பரமாயி அம்மையார். பள்ளிப் படிப்பை தூத்துக்குடியிலுள்ள புனித சேவியர் பள்ளியிலும், கால்டுவெல் பள்ளியிலும் படித்தேன். பின்னர் திருநெல்வேலியிலுள்ள இந்து கல்லூரியில் படித்தேன். அதன்பிறகு, திருச்சியில் சட்டக் கல்வி கற்று, வழக்கறிஞராகத் தொழிலைத் துவங்கினேன்.

**விடுதலைப் போராட்டத்தில் நான் :**

இக்கால கட்டத்தில் நம் நாட்டில் சுதந்திரப் போர் தீவிரமடைந்து கொண்டிருந்தது. நான் என்னுடைய வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு,



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores

10ஆம் வகுப்பு

# உடனடித்தேர்வு ஆகஸ்ட் - 2022
# மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்
## Language - Part - I - Tamil

கால அளவு : 3.00 மணி நேரம் ] (வினாத்தாள் விடைகளுடன்) [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்

**குறிப்புகள் :** (i) இவ்வினாத்தாள் **ஐந்து** பகுதிகளைக் கொண்டது.
(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். [15 × 1 = 15]

1. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது :
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

2. 'பெரிய மீசை' சிரித்தார் - கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத்தொகை ஆ) உவமைத் தொகை
இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை

3. 'உனதரு பார்ப்பன் அடியனே' - யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன்
ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி
ஈ) நோயாளியிடம் மருத்துவர்

4. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ) தமிழ் ஆ) அறிவியல்
இ) கல்வி ஈ) இலக்கியம்

5. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
ஈ) அங்கு வறுமை இல்லாததால்

6. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் :
அ) நாட்டைக் கைப்பற்றல்
ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல்
ஈ) கோட்டையை முற்றுகையிடல்

7. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் :
அ) அகவற்பா ஆ) வெண்பா
இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

8. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி:
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்
இ) உருவகம் ஈ) தீவகம்

9. 'சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்' - என்று கூறியவர்:
அ) திரு.வி.க
ஆ) க.சச்சிதானந்தன்
இ) நம்பூதனார்
ஈ) தனிநாயக அடிகள்

10. 'மொழி ஞாயிறு' என்றழைக்கப்படுபவர் யார்?
அ) தமிழழகனார் ஆ) கம்பர்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) வைரமுத்து

11. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
அ) கூவிளம் தேமா மலர்
ஆ) கூவிளம் புளிமா நாள்
இ) தேமா புளிமா காசு
ஈ) புளிமா தேமா பிறப்பு

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"காற்றே, வா
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா
இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ராண - ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு."

12. 'மயலுறுத்து' என்பதன் பொருள்:
அ) விளங்கச் செய் ஆ) மயங்கச் செய்
இ) அடங்கச் செய் ஈ) சீராக

13. ப்ராண ரஸம் - பொருள் தருக.
அ) உயிர் வளி ஆ) கார்பன்-டை-ஆக்ஸைடு
இ) ஹைட்ரோ கார்பன் ஈ) கந்தக-டை-ஆக்ஸைடு

14. 'மிகுந்த' - இலக்கணக் குறிப்பு தருக.
அ) வினையெச்சம் ஆ) முற்றெச்சம்
இ) பெயரெச்சம் ஈ) வினைத்தொகை

15. நீரலைகளின் - பிரித்தெழுதுக.
அ) நீர் + அலைகளின் ஆ) நீரின் + அலைகளின்
இ) நீரலை + களின் ஈ) நீர + அலைகளின்



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample for Full Book Order Online or
Available at All Leading Bookstores



**பகுதி - II (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**குறிப்பு :** **எவையேனும் நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் **21–க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். [4 × 2 = 8]

**16.** ‘உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்’ - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

**17.** விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும் :

அ) சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் செய்குதம்பிப் பாவலர்.

ஆ) பரஞ்சோதி முனிவர் திருமறைக் காட்டில் பிறந்தவர்.

**18.** தேம்பாவணி - குறிப்பு வரைக.

**19.** தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக; தொடரில் அமைக்கவும்.

**20.** பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

**21.** ‘பல்லார்’ எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**குறிப்பு :** **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். [5 × 2 = 10]

**22.** பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் பயனிலைகள் யாவை?

**23.** “ஒலித்து” பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**24.** பழமொழிகளை நிறைவு செய்க.

அ) உப்பில்லாப் .......................

ஆ) ஒரு பானை .......................

**25.** பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**26.** கலைச் சொற்கள் தருக.

அ) Vowel ஆ) Discussion

**27.** நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.

**28.** சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்கவும்.

அ) பழமைக்கு எதிரானது - எழுதுகோலில் பயன்படும்

ஆ) ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**குறிப்பு :** **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். [2 × 3 = 6]

**29.** “தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்” இடம்சுட்டிப் பொருள் விளக்குக.

**30.** உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பருப் பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு சிறப்பாகி, ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது.

அ) பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.

ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

இ) பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.

**31.** ஜெயகாந்தனின் திரைப்படப் படைப்புகளைக் கூறுக.

**பிரிவு - 2**

**குறிப்பு :** **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் **34–க்கு கட்டாயமாக** விடையளிக்க வேண்டும் [2 × 3 = 6]

**32.** பெருமாள் திருமொழி - நூற் குறிப்பு வரைக.

**33.** பூவின் நிலைகளை வரிசைப்படுத்தி எழுதுக.

**34.** அடிபிறழாமல் எழுதுக.

அ) “வாளால் அறுத்துச்” - எனத் தொடங்கும் குலசேகராழ்வார் பாடல்.

ஆ) “தூசும் துகிரும்” எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்

**பிரிவு - 3**

**குறிப்பு :** **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் **சுருக்கமாக** விடையளிக்கவும். [2 × 3 = 6]

**35.** பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப் பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**36.** “அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது” - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

**37.** உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

**பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)**

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். [5 × 5 = 25]

**38.** அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப் பேச்சு ஒன்றை உருவாக்குக. **அல்லது**

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடி களோடும் ஒப்பிட்டு எழுதுக.

**39.** அ) பள்ளித் திடலில் கிடைத்த பணப் பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக. **அல்லது**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமாற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**40.** காட்சியை கண்டு கவினுற எழுதுக.



www.surabooks.com

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000